# உறவுகள்
Uravukhal




ஐப்பசி கார்த்திகை மார்கழி 2025 இதழ்: 96

*Amonerie Tamoule Catholique srilankaise - 57 Bld de Belleville - 75011 Paris - FRANCE*

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிக்கை





என் ஆவியை உங்கள் மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள். (எசே:37:14)




# உள்ளே.....

இதழ் 96

ஒக் ~ நவெ ~ டிசெ


3 ஆசிரியர் பக்கம்

4 வாழ்விக்கும் அரசவர்.....

5 இறைவனின் அழைப்பு

6 .கிறிஸ்மஸ் ஒரு .........

7 அனைத்துப் புனிதர்கள்......

9 .இளையோர் வாழ்வில்.....

11 எவ்வகைப் பேராசைக்கும்.

15 வாழ்வின் யதார்த்தம்..

16 எதற்காக இந்த நாள்?....

18 முடிவு மயக்கம்......

19 இஞ்சித் துவையல்...

23 உன்னையே நீ......



**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்

பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

**மறையாசிரியர்:** திரு: ரி. எம்.சந்தியாகு

சில்வெஸ்ரர் தம்பிராசா

திருமதி: றெஜீனா சிவகுமாரன்

திரு: ஆனந்தன் செபமாலை

திருமதி: வில்லியம் றெஜினோல்ட்

திருமதி: ஏஞ்சல் யேக்கப்

செல்வி: லூசியா மேரி

செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா



**தொடர்புக்கு:**

« URAVUKAL »

Aumônerie Tamoule Catholique

Srilankaise

Chapelle Notre Dame Réconciliatrice

57, Bld de Belleville

75011 Paris - France

☎: 01 48 06 95 05

**E - mail:** uravukhal.france@gmail.com

**Website:** www.uravukal.org



**வெளியீடு:**

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரானஸ்

**கணினி வடிவமைப்பு:**

றெஜீனா சிவகுமாரன்

இணையதள பதிப்பாசிரியர்

**சந்தா விபரம்**

தனிப்பிரதி ஒன்று: 2€

வருடச் சந்தா விபரம்: 20€

ஏனைய நாடுகளுக்கு: 22€





## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்

நேரம்: 9:00

பெல்வில் சிற்றாலயத்தில்



05-10-2025

02-11-2025

07-12-2025

# ஆசிரியரிடமிருந்து..........



**ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில்,**
**அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்**
**ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில்,**
**காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.**
**(தி. பா 127:**

இறைவனின் அன்பு உறவுகளுக்கு !

வேகமாக ஒடும் காலத்திலும், உறவுகளுக்கும் மனித நேயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் எம்மைப் பார்த்து இறைவன் மகிழ்ச்சி அடைகின்றார். காரணம் அன்பு எங்கு உள்ளதோ, அங்குதான் இவை இருக்கும்.

எமது ஆன்மிக பணியகம் ஆரம்பிக்கப்பட்டு முப்பத்தொரு ஆண்டுகள் கண்டு விட்ட இம் மகிழ்வான தருணத்தில், இறைவனுக்கு கோடான கோடி நன்றிகள்.

இதற்கு அடித்தளம் போட்டு மெல்ல மெல்ல உருவாக்கி வளர்ச்சியின் மேன்மைக்கு கொண்டு வந்த அனைத்துக் குருக்களுக்கும், இறைமக்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள். எடுக்கும் நல்ல தீர்மானங்களை செய்து முடிக்க இறைவனின் வல்லமையின் ஆவியானவர் எம்மை வழி நடத்துகின்றார் .

பதினெட்டு பணித்தளங்களும் ஒன்றிணைந்து சிறப்பாக நடத்திய பணியக விழா, எண்பத்தைந்துக்கு மேலான குழந்தைகளும், சிறியவர்களும் இணைந்து பல புனிதர்களை எமது கண்முன் கொண்டு வந்து சிறப்பித்த புனிதர்களின் விழா. அந்த மகிழ்வை எமக்கு கொடுத்த இறைவன் மனித வாழ்வின் நிலையாமையை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வாழ வேண்டும் என்பதை மத்தேயு நற்செய்தி 5:1–12 வசனங்கள் எடுத்து கூறுகின்றது.

திருஅவை இறந்த ஆன்மாக்களின் நித்திய இளைபாற்றிக்காகவும், எமது உறவுகள், நண்பர்கள், யாரும் நினையாத ஆன்மாக்களை நினைத்து நாம் சிறப்பாக மன்றாட வேண்டும் என்பதற்காகவும், கார்த்திகை மாதத்தில் இறந்த ஆன்மாக்களுக்கான மாதமாக கொடுத்துள்ளது.


இம்மாதத்தில் இறுதி வாரம் திருவருகைக்காலம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்நோக்கோடு, அமைதி, மகிழ்ச்சி, அன்பு இவற்றை சுவைத்து இயேசுவின் பிறப்பை நிறைவோடு கொண்டாடுவோம். பிறக்கும் புதிய ஆண்டு 2026 உலகெங்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்க ஒன்றிணைந்து மண்றாடுவோம். எமக்காக மனிதனாக பிறந்த இறைமகன் தந்தையின் திருச்சித்தம் நிறைவேற்ற தன்னையே பலியாக கொடுத்தார் என்பதை, ஒவ்வொருவரும் நாள் தோறும் நினைத்து எம்மை பாவம் அனுகாமல் காத்து கொள்ள வேண்டும்.

எனவே இந்த ஆண்டு முழுவதும் எம்மை கண் போல காத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். புதிய ஆண்டிலும் அன்னை மரியாளின் பரிந்துரை மூலம் இறைவனின் அருள் கரம் எம்மோடு துணை நிற்கும் என்ற விசுவாசத்துடன், உங்கள் அனைவரின் ஒன்றிணைந்த செயல்பாடுகளுக்கு மனம் நிறைந்த பாராட்டுக்களும் நன்றிகளும். இதே செயல் திறனை மென்மேலும் எதிர்நோக்கி இருக்கும் உங்கள்

**உறவில் நிலைக்கும்,**

**அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ. ம. தி**





# வாழ்விக்கும் அரசவர் வழி சென்று வாழ்வடைவோம்

மறையாசிரியர் தி. ம. சந்தியாகு, வேங்கிடக்குளம் இந்தியா

1. வாழ்லிக்கும் அரசரவர் வழிசென்று வாழ்வடைவோம்
வானகத் தந்தை நமை வருந்தி அழைக்கின்றார்.
தாழ்வுக்கும் வேலையில்லை தயவுக்கும் ஒய்வுஇல்லை
தந்தை இறை துனையிருக்க தரணியில் பயமில்லை
ஏழ்மைமனம் கொண்டவர்க்கு எக்குறையும் இருப்பதில்லை
இதுதான் கிறிஸ்தவத்தின் எதிர்நோக்கு என்றிடுவோம்
சூழ்ச்சியும் நம்மையொன்றம் சூழ்ந்திடாது நிமிர்ந்துநிற்போம்
சொல்லொண்ணாத் துன்பங்களும் சொல்லாமல் ஓடிவிடும்.

2. நம்கையாய் இருக்கின்ற நம்பிக்கை உயிர்கொடுக்கும்
நாளெல்லாம் அவர் கரத்தில் நம்மையே அர்ப்பணிப்போம்
செம்மைசேர் இவ்வுலகில் செயலாலே நன்றிசொல்வோம்
சேவைதனைக் கையிலேந்தி செகத்தையே வென்றெடுப்போம்
தும்பிக்கை கொண்டு யானை துரிதமான செயல்பாட்டால்
துன்பத்தை விரட்டுதல்போய் துணிந்துநிற்போம் எந்நாளும்
வெம்பகை வீணென்போம் வெற்றியே இலக்கென்போம்
வேந்தர்இயேசு பணியிலே விருப்புடன் இணைந்திடுலோம்

3. சாட்சிய வாழ்வுதான் சரியான தீர்வென்போம்
சத்திரம் சொல்லட்டும் சத்தியம் வெல்லட்டும்
ஆட்சி நம் கையில்கொண்டு அதிதாரம் செய்தால்தான்
ஆகிடும் அனைத்துமென ஆசித்தலில் நியாயமுண்டோ
மாட்சிநிறை செயல்களாலே மரணத்தை வென்ற இயேசுவையே
மனங்களிலே குடிவைப்போம் மறைந்துவிடும் ஐயமெல்லாம்
சாட்சிக்கு எளியவராய் காலமெல்லாம் வாழ்ந்தோர் பலர்
குணப்பொழுதும் இறப்பதில்லை கடவுள் சொல்லும் பாடம் இது

4. ஆண்டு விழா காணுகின்ற ஆன்மீகப் பணியகத்தை
அகத்தினில் பதித்துநாம் ஆக்கப்பணி செய்திடுவோம்
பூண்டிடுவோம் இலக்குகளை புவியினைக் காப்பாற்ற
புனிதபணி அதுவன்றோ புரியவைப்போம் எல்லார்க்கும்
வேண்டுதலை நிறுத்திடாது வெற்றிபெற செபித்திடுவோம்
வீண்நேரம் கடத்தாமல் விளக்கேத்தி உதவிடுவோம்
யாண்டும் நலம்பெறலே நாள்தோறும் வலம் வருவோம்
யார்க்கெல்லாம் தேவையுண்டோ யாமாவோம் அவர்களுக்கு

5. குடும்பத்தால் அருள்வாக்கை கூடிநின்று முழக்கம் செய்வோம்.
குறையொன்றும் வந்திடாது குவலயத்தில் மகிழ்வுறுவோம்
கடும் துன்பம் என்றெதுவும் காசினியில் இருப்பதில்லை
காளையர்தாம் இணைத்து நின்றால் காற்றாய் பறந்திடுமே
விடுகின்ற சவால்களை விலக்கியே லாழ்ந்திடுவோம்
விரைந்திடும் நலன்நம்மை விருந்திட்டு வரவழைப்போம்
தொடுகின்ற செயலெல்லாம் தூய ஆவி ஒளிபட்டு
தொல்லுலகில் நம்பெயரை தூதுரையாய் சொல்லிடுமே!

# நாம் அனைவரும் புனித வாழ்வு வாழவே அழைக்கப்பட்டுள்ளோம்

திருச்சபையானது கார்த்திகை மாதத்தில் சகல புனிதர்களின் பெருவிழாவையும், சகல ஆத்துமாக்களின் திருநாளையும் கொண்டாடி வருகிறது. ஏன் இந்தப் புனிதர்கள் நினைவு கூரப்பட வேண்டும்? இவர்கள் இன்னும் இறைவனோடு வாழ்ந்து கொண்டிருப்பதால்.

ஆம், புனிதர்கள் இவ்வுலகில் இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்ந்து சாட்சியம் பகர்ந்து விண்ணுலகை உரிமை யாக்கிக் கொண்டவர்கள் நம்மில் பலர், குருக்கள் துறவியர் மட்டும்தான் புனிதராகும் தகுதியுடையவர்கள் என்பர். இல்லை, இவ்வுலகில் பிறப்போர் புனிதர்களாகவே பிறப்பதில்லை. கிறிஸ்துவின் மதிப்பீடுகளில் வளர்ந்து, கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை சாட்சியமாக்கி விண்ணில் இடம் பிடித்துக்கொண்டவர்கள். திரு முழுக்கின் வழியாக இறைவனின் பிள்ளைகளான நாம் அனைவருமே புனித வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

ஆனால் அவ்வாழ்வை உரிமையாக்கிக் கொள்கின்றோமா? என்பது தான் நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி. மரணத்திற்குப் பிறகு மனிதனின் நிலை என்ன? தீமை செய்தவர்கள் நரகத்திற்கும், நன்மை செய்தவர்கள் சொர்க்கத்திற்கும் செல்வார்கள் என்பது பொதுவான கருத்து. இந்த சொர்க்கம் நகரம் பற்றி பல்வேறு கருத்துக்கள் உண்டு. அதாவது சொர்க்கம் நரகம் இங்குதான் இருக்கிறது. நல்லது செய்தவர்கள் இன்பத்தையும், கெட்டது செய்தவர்கள் துன்பதையும், நோய் நொடிகளையும் அனுபவிப்பார்கள். இந்த இன்பமும், நோய் நொடியும் தான் சொர்க்கம் நரகம் எனக் கூறுவர். எது எப்படியாயினும் நாம் நன்மை செய்து சொர்க்கத்தை சொந்தமாக்குவதா? இல்லை, தீமை செய்து நரகத்தை நமதாக்குவதா? இது தான் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது.

இறந்த உடலை எடுத்துச் செல்லப்படும் போது, அதைப் பார்த்து பத்துப்பேர் ஐயோ புண்ணியவான் போய்விட்டாரே என்று சொன்னால் அது சொர்க்கத்தின் படிக்கட்டுக்கள் ஆகும். அதே வேளையில் அதே பத்துப்பேர் சண்டாளன் போய்விட்டான் என்றால் அது நரகத்தின் படிக்கட்டுக்களாக இருக்கும். அந்த நல்ல பெயரையே மனிதன் தேட வேண்டும். இவ்வுலகில் நம்மோடு வாழ்ந்து மரித்தது எமது உறவுகள் பயணித்த பாதையே நாம் செல்லவிருக்கும் பாதை என்பதை மறந்து விடக் கூடாது.

இறையாசீருடன்
உங்கள் நண்பன்

# இறைவனின் அழைப்பு

அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

இறைவனின் அழைப்பு என்பது ஒரு நிமிடத்தில் புகைப்படம் வாங்குவது போலன்று. செய்திகளை உடன் பரிமாறும் அலை பேசி போல் அல்ல, மாறாக உள்ளத்தில் உருவாகும் முன்பே, கருவறையில் உறவாடிக் கருவாகும் முன்னே தேர்ந்தெடுத்து தனது தூதுவரை தயார் செய்கின்றார் இறைவன். தாய் தன் குழந்தையை பத்துமாதம் சுமக்கின்றாள். இறைவனோ வாழ்நாளெல்லாம் தாங்குகின்றார்.

நாம் அனைவரும் நுகர்வோர் கலாச்சாரத்தில் வாழ்ந்து வருகின்றோம். ஒரு பொருள் சரியில்லையென்று தூக்கியெறிந்து விடுகின்றோம். பல நேரம் Readymade... பொருள்களை வாங்கும் போது, மற்றொன்று இலவசமாக கிடைக்கின்றது. ஆனால் இறைவனோ தான் நேர்ந்தெடுத்தவர்களை தூக்கியெறிந்து விடுவது கிடையாது. தூதுரைப்போருக்கு இலவச இணைப்பாக மாற்று தூதுவர்களையும் தயாரிப்பது கிடையாது. இறைவனின் அழைப்போ சற்றுவித வித்தியாசமானது. பிறப்பதற்கு முன் அறிவித்து அவர்களை முன் குறித்து வைக்கின்றார், தயார்படுத்துகின்றார், அருட் பொழிவு செய்கின்றார். மாட்சிப்படுத்துகின்றார். இவ்வுலகில் வாழ்வோர் இவ்வுலகைச் சார்ந்து பணிகளைச் செய்து வருகின்றோம். இவ்வுலகப் பணி வாழ்வு சிற்றின்பங்களை, வெளியுலக ஆடம்பரங்களில் குறுகிய கரல மகிழ்ச்சியை கொடுத்து மனதை சற்று நேரம் நிம்மதியடையச் செய்கிறது. இவையெல்லாம் பணி தரும் வாழ்வு.

வாழ்வு தருகின்ற பணி என்பது கடவுளின் அழைப்பை பெற்று அர்ப்பண வாழ்வு வாழ்ந்து, முடிவில்லா வாழ்வுக்கு இட்டுச் செல்வது இதன் பணியாக இருக்கின்றது. முடிவில்லா வாழ்வைத் தருகின்ற பணி இறைவனுக்கு சான்று பகர்ந்து வாழ்வதிலும், அன்பைப் பகிர்ந்தளிப்பதிலும் கிறிஸ்தவ வாழ்வு அடங்கியிருக்கிறது.

## கடவுள் ஓர் அறிகுறியுடன் தோன்றுதல்

மோயிசனுக்கு எரியும் முட்செடியில் காட்சி கொடுத்ததன் மூலம் காடசியளித்தார். (வி. 3:4) சாமுவேல் ஆலயத்தில் தூங்கிக் கொண்டிருக்கும்போது கடவுள் கனவில் நோன்றுகிறார். (1சாமு:3–19) எரேமியா தான் அழைக்கப் பட்டதை (உரையாடல் போல்) கடவுள் நேரடியாக வந்து சொன்னது போல் விவரிக்கின்றார். எரேமியாவுக்கு விடப்பட்ட தன்னிகரற்ற தனிப்பெரும் அழைப்பு, இறைத் தூதர்கள் இறைவனுடைய அழைப்பை உடனே ஏற்றுக் கொள்வதில் தயக்கமும் நடுக்கமும் இருப்பதை மறைநூல் நமக்கு காட்டுகின்றது.

கடவுள் தம் கட்டளைகளை நிறைவேற்ற துரிதப்படுத்துகின்றார். தனது தூதுவர்களுக்கு வலிமை கொடுக்கின்றார். அழைப்பை பெற்றுக் கொண்டவர்கள் போராடத் துணிவு கொள்கின்றார்கள்.

தூயபவுல் "வலுவற்றவருக்கெல்லாம் வலுவற்றவரானேன்'' என்று தன் அழைத்தலின் மேன்மையைச் சொல்கின்றார். ஆண்டவர் எரேமியா பணி வாழ்வில் விரக்தி, தனிமை, துன்பம், சோர்வு, தளர்வு, வேதனை, போராட்டம், கொடுமை என வாழ்வில் சந்தித்திராத பிரச்சனைகளால் பின்வாங்கிய போது ஆண்டவர் உடனிருந்து அழைத்தலை உறுதிப்படுத்தி அவரைத் திடப்படுத்துகின்றார். அழைத்தலின் உண்மையான விசுவாசமும், அன்பும், ஆர்வமும் இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார்.

## சவாலே சமாளி

இன்று நாம் எவ்வாறு இறையழைத்தலை உணர்ந்து சவால்களை சந்திக்க போகின்றோம்? எதை ஆதாரமாகக் கொண்டு வெற்றி பெறப் போகின்றோம்? இறைபடிப்பினைகளைப் பற்றி சொல்லிலும் செயலிலும் அழைத்தலில் வாழ்ந்து காட்டுவோம். இறைத் தூதுவராக ஒவ்வொருவரும் திரு–முழுக்கின் மூலம் அழைக்கப்பட்டுள்ளோம். பயனுள்ளவன் என்று அழைக்கப்பட்ட அடிமை ஒனேசிமுஸ் விசுவாசத்துடன் நடந்து கொண்டமையால் பிலமோனும் மகிழ்ச்சியடைந்தார். நாமும் அழைக்கப்பட்டதற்கான பணியை செய்து முடிக்கும் போது இறைவனும் இறைமக்களும் மகிழ்ச்சி கொள்வார்கள்.

## எப்படி அழைக்கப்பட்டுள்ளோம்?

ஒவ்வொருவரையும் இறைவன் தம் பணிக்கென பெயரை சொல்லி அழைக்கின்றார். ஆபிரகாமை நந்தவனத்தில் ஆதாமை பெயர் சொல்வி அழைக்கின்றார். (எண் 16:) (தொ. நூல் 2) சாமுவேலை பெயர் சொல்லி அழைக்கின்றார் (1சாமு: 3:4) பன்னிரு திருத்தூதர்களை பெயரிட்டு அழைக்கின்றார். சவுலைப் பெயர் சொல்லி அழைக்கின்றார் (திப 9:8). நம் ஒவ்வொருவருக்கும் ஒரே தூய ஆவி அருளப் பட்டுள்ளது. நாம் நம் பணியைச் செய்ய உந்து சக்தியை கொடையாக கொடுத்துக் கொண்டேயிருக்கிறார், பலருக்கு எழுத்து திறமை இருக்கிறது. சிலருக்கு பேச்சு திறமை இருக்கிறது. பலருக்கும் தனிப்பெரும் தன்னம்பிக்கை கொண்ட தனித்தன்மை இருக்கிறது. இத் திறமைகளைக் கொண்டு ஆண்டவர் பக்கம் திசை திரும்பி புரட்சி வீரர்களாக புறப்படுவோம். வாழ்வு தருகின்ற பணிக்காக உழைப்போம். இறைவனின் அழைப்பை உணர்வோம். முடிவில்லா வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

## சிந்தனைக்கு

ஒருவர் தம் உடலைக் கடவுளிடம் ஒப்படைத்து வாழும்போது, அவர் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராகவும் விழிப்பாகவும் இருப்பார். கடவுளிடமிருந்து அதற்குரிய ஆசியைப் பெறுவார். ஆகையால், நம்முடைய உடலை ஆண்டவரிடம் ஒப்படைத்து, அவர் தரும் ஆசிகளைப் பெறுவோம்.

## ஒரு கப் இஞ்சி டீ உங்கள் காலையை உற்சாகமாக மாற்றி விடும்... !




ஒரு தம்ளர் இஞ்சி டீயில் ஏகப்பட்ட நன்மைகள் அடங்கியுள்ளன. எனவே இனி தினசரி காலையில் தவறாமல் காபி, டீக்கு பதிலாக இஞ்சி குடித்து வரலாம். ஒரு கப் இஞ்சி டீ உங்கள் காலையை உற்சாகமாக மாற்றி விடும் வல்லமை கொண்டது. இந்த இஞ்சி டீயில் ப்ளே வர்ஸ், நறுமணம் எல்லாம் அடங்கியுள்ளது. உங்களுக்கு சுவையும் பிடித்தமானதாக இருக்கும். எனவே காலைப் பொழுதை ஒரு கப் இஞ்சி டீயுடன் தொடங்குங்கள். இஞ்சி டீயில் வைட்டமின் சி, பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் இரும்புச் சத்து என ஏராளமான சத்துக்கள் உள்ளன. இது உடல் எடையை மட்டும் குறைப்பதோடு நன்மைகளையும் நமக்குத் தருகிறது. உடல் எடை இழப்பு ஒரு கப் இஞ்சி டீ உங்கள் காலையை உற்சாகமாக மாற்றி விடும்... ! உடல் எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு, இஞ்சி ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். இது நமது உடலில் உள்ள இரத்தத்தில் சர்க்கரை அளவையும் கட்டுப்பாட்டில் வைக்கிறது. இது பசியை போக்கி வயிறு நிரம்பிய எண்ணத்தைக் கொடுக்கிறது. இதனால் உடல் பருமன் வராமல் தடுக்கப்படுகிறது. செரிமானத்தைத் தூண்டி செரிமான கோளாறுகளைச் சீர்செய்யும் அற்புதமான மருந்து இஞ்சி என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

செரிமானக் கோளாறுகள் தொடர்ந்து இருந்தால் அதற்கு இஞ்சி டீ சிறந்த நிவாரணம் அளிக்கும். வயிறு மந்தம், வீக்கம் போன்ற வயிறு சம்பந்தமான பிரச்சினைகளைக் குறைக்கிறது. அதனால் காலையில் எழுந்ததும் ஒரு தம்ளர் இஞ்சி டீ குடித்தால் அன்றைய தினம் முழுவதும் உங்களுடைய செரிமான உறுப்புகள் நன்றாக செயல்பட ஆரம்பிக்கும். எடுத்துக் கொள்ளும் உணவில் இருக்கும் ஊட்டச்சத்துக்களைக் குடல் உறிஞ்சிக் கொள்ளவும் உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல், இஞ்சி டீயில் உள்ள வைட்டமின் சி மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்கள் நமது நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது. எளிதில் நோய்க்கிருமிகள் நம்மை தாக்காமல் எதிர்த்து போராட இது உதவுகிறது. இயல்பாகவே நோய் எதிர்ப்புத்தன்மையை அதிகரித்து கொடுப்பதால் எப்போதும் ஆரோக்கியம் என்பதும் உறுதியா-கிறது. இஞ்சியில் உள்ள அழற்சி எதிர்ப்பு தன்மை நமக்கு ஏற்படும் அழற்சி, அழற்சியால் ஏற்படும் வலி போன்றவற்றை எதிர்த்து போரிடுகிறது.

## 'கிறிஸ்மஸ் ஒரு ஆடம்பர விழா அல்ல, அது ஒரு பகிர்தல் விழா"




கத்தோலிக்க திருச்சபையானது இவ்வருடம் மார்கழி முதலாம் திகதியிலிருந்து திருவருகைக் காலத்தைத் தொடங்குகின்றது. கிறிஸ்துவின் பிறப்பு விழாவுக்கு முன் வரும் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளை உள்ளடக்கிய காலமே திருவருகைக் காலம். இக்காலத்தில் நம்மை தகுந்த விதத்தில் தயாரித்துக் கொள்வதற்காக இக்காலத்தை திருச்சபை அறிவிக்கின்றது. இக்காலம் இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவதற்காக நம்மைத் தயாரித்துக் கொள்ள அழைக்கும் காலம். திருவருகைக் காலம் என்பது ஒரு தவக்காலம் ஆகும். மனம் வருந்துதலையும், செப, தவ நோன்பிருந்து இயேசுவின் வருகைக்காக தம்மையே தூய்மைப்படுத்திக் கொண்டு காத்திருக்கும் காலம். அதுமட்டுமல்ல உன்னதத்தில் கடவுளின் வலப்புறத்தில் மகிமையுடன் அமர்ந்திருக்கும் இறைமகன் இயேசு மானிடருக்கு நீதி வழங்குவதற்காக வரும்போது, அவரைச் சந்திப்பதற்காக நம்மைத் தயாரித்துக் கொள்ள அழைப்பு விடுக்கும் காலம். இயேசு மீண்டும் ஒரு மனிதக் குழந்தையாக இவ்வுலகில் தோன்றப் போவதில்லை என்பது நம் விசுவாசம் கற்றுத்தரும் பாடம்.

ஆனால் அவரது பிரசன்னத்தை அவரது பிறப்பாக நம் உள்ளங்களில் நாம் உணர்ந்துகொள்ளலாம். இயேசுவின் பிரசன்னம் நம் உள்ளங்களில் உணரப்படுகின்றபோது அவர் நம்மில் பிறந்திருக்கிறார் என்று நாம் உணர முடியும். இயேசுவின் பிரசன்னத்தை நாம் திருவருகைக்காலத்தில் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். எனவே திருவருகைக் காலத்தை அர்த்தமுடன் கொண்டாட ஆயத்தமாகுவதற்காக திருச்சபை எமக்கு இன்னுமொரு வரம் ஒன்றை கொடுத்துள்ளது. அவைதான் நாம் ஆண்டுதோறும் மார்கழி 8ஆம் திகதியன்று கொண்டாடும் "மரியா அமல உற்பவி" என்ற விழாவாகும்.

திருவருகைக் காலத்தில் இவ்விழா அமைந்திருப்பது மிகவும் பொருத்தம் என்று கூறலாம். மரியா இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்து காத்திருந்தார். நாமும் இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்திருந்து எம்மை தயாரிக்க வேண்டும். இதனால் திருவருகைக்கால தயாரிப்பின்போது நாம் மரியாவை நோக்கி செபிக்கவும், அவரது அருட்துணையை நாடவும் இவ்விழா உதவுகின்றது. அத்தோடு கிறிஸ்மஸ் விழா, ஒரு ஆடம்பரவிழா மட்டும் அல்ல, அது ஒரு பகிர்தல் விழா. பகிர்தல் இல்லையென்றால் அவ்விழாவிற்கு அர்த்தம் இல்லை. கிறிஸ்மஸ் விழா அன்று நாம் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்ல, மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். பசித்தவர்களுக்கு உணவு அளித்து, ஆடையற்றவர்களுக்கு ஆடை கொடுத்து, நோயுற்றவர்களை பார்க்கச் சென்று, சிறையில் இருப்பவர்களை காணச்சென்று... போன்ற இறைவார்த்தைக்கு ஏற்ப நாம் வாழும்போது நாம் உண்மையான இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தமுள்ளதாக்குகின்றோம். ஆகவே நம்மிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வோம். அப்போது இயேசு எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் வந்து பிறப்பார்.

# அனைத்து புனிதர்கள் பெருவிழா என்பது என்ன? ஏன் கொண்டாடுகிறோம்? இந்த நாள் எவ்வாறு உருவாகியது?



நவம்பர் 01ம் திகதி அனைத்து புனிதர்களின் விழாவில் உலகிற்கு விடுக்கப்படுகின்ற செய்தி யாதெனில் "தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், அவர்கள் கடவுளைக் காண்பர்" என்பதாகும். அனைத்து புனிதர்களை எண்ணிப்பார்த்து அவர்களுடன் நமது வாழ்வினையும் புடமிட்டுக் கொள்ள இன்றைய நாள் அழைக்கின்றது. கத்தோலிக்கரின் நம்பிக்கை அறிக்கையிலுள்ள ஒரு வசனம்: "புனிதர்களின் சமூக உறவினையும் நம்புகிறேன்" என்பதாகும். புனிதர்களின் சமூக உறவு என்பது குறித்து கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூல் தருகின்ற விளக்கம் யாதெனில் "நம்பிக்கை, அருளடையாளங்கள், சிறப்பாக நற்கருணைக் கொண்டாட்டம், தனி வரங்கள், ஆவிக்குரிய பிற கொடைகள் ஆகியவற்றில் திருஅவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ள பொதுவான பங்கேற்பினைச் சுட்டிக் காட்டுகின்றது...தன்னலம் கருதாத (1 கொரி1 3:5) எல்லாவற்றையும் பொதுவாகக் கொள்கின்ற (திப. 4:32) பிறர்நலம் கருதிய செயற்பாடாகும்...இதற்கு அன்பே அடிப்படையாகின்றது". மேலும் புனித நிலையில் உள்ளோரிடையேயுள்ள தொடர்பினைக் குறித்து பேசுகிறது, அதாவது "இறந்தவர்களோடும் உயிர்த்த கிறிஸ்துவோடும் இறை அருளால் ஒன்றித்திருப்பவர்களிடையேயுள்ள உறவினைக் குறிக்கின்றது. இவர்களுள் சிலர் மண்ணுலகில் திருப்பயணிகளாக இருக்கின்றனர். வேறு சிலர் இவ்வுலக வாழ்வினைக் கடந்து தூய்மை பெறும் நிலையில் இருக்கின்றனர், நம் இறைவேண்டலால் உதவியும் பெறுகின்றனர். மற்றவர்கள் ஏற்கனவே இறை மாட்சியை அனுபவித்து நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இணைந்து இறை மாட்சிக்காக, கிறிஸ்துவில் ஒரே குடும்பாக திரு அவையினை உருவாக்குகின்றார்கள்.

அனைத்து புனிதர்களின் விழாவானது, திருஅவையில் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதற்கான வரலாற்று ஆதாரமாக அமைவது உரோமையிலுள்ள பந்தியோன் (Pantheon) தேவாலயமாகும். இது பல கடவுளர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வணக்கத்தலமாகும். இக்கட்டடக் கலையம் கி.மு. 25 – 27 ஆண்டுகள் காலப்பகுதியில் பேரரசன் மார்க்கஸ் அகிரிப்பாவினால் கட்டப்பட்டது. இது கி.பி. 80களில் ஏற்பட்ட தீயினால் சிதைவடைந்தது. மீண்டும் பேரரசன் தொமிசியன் காலத்தில் கட்டப்பட்டது, அதுவும் கி.பி. 110 தீயிடப்பட்டு சிதைவடைந்தது. இன்றுள்ள அமைப்பினை கி.பி. 118 – 125ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் பேரரசன் ஏட்றியன் கட்டி முடித்தான். இக்கட்டிடத்தினை 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (கி.பி. 609) அன்றைய பாப்பிறை நான்காம் பொனிபஸ் என்பவரிடம் பேரரசன் கையளித்தான். அங்கு அவர் மறைசாட்சியர்களின் சுரங்கக் கல்லறைகளில் பாதுகாக்கப்பட்ட உடல்களைக் கொண்டு வந்து பேணிப்பாதுகாத்தார். அன்று முதல் பந்தியோன் புனித மரியாளினதும் அனைத்து மறைசாட்சியர்களினதும் பசிலிக்கா பேராலயமாக உயர்த்தப்பட்டது. அதுமுதல் ஆரம்பிக்கப்பட்டதே அனைத்து புனிதர்கள் விழாவுமாகும்.

கத்தோலிக்க திருஅவையின் முதல் மறைசாட்சியான புனித ஸ்தேவான் முதல் கார்லோ அகுஸ்தீஸ் வரையிலும் பல்லாயிரம் பேர்கள் புனிதர்களாக வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும், மற்றும் எண்ணப்படாத பல்லாயிரக்கான புனிதர்களையும் ஒரே நாளில் நினைவு கூர்வதே அனைத்து புனிதர்கள் விழாவின் சிறப்பாகும். யார் இந்தப் புனிதர்கள் என்பதனை இன்றைய இறைவார்த்தையின் ஒளியில் நோக்குகின்றபோது, அங்கு புனிதர்கள் குறித்து **"முத்திரை குத்தப்பட்டவர்கள், எண்ணற்ற எண்ணிக்கையிலானவர்கள், வெண்ணாடை அணிந்தவர்கள். இவர்கள் கொடிய வேதனையிலிருந்து மீண்டவர்கள், தங்களது தொங்கலாடைகளை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் துவைத்து தங்களையே வெண்மையாக்கிக் கொண்டவர்கள்"** இதனையே இரண்டாம் இறைவார்த்தையில் புனித யோவான் தனது மடலில் "அவரை (இயேசுகிறிஸ்து) எதிர்நோக்கியுள்ள யாவரும், அவர் தூய்மையுள்ளவராக இருப்பது போல் தம்மையே தூய்மையாக்க வேண்டும்" என்று அழைப்புத் தருகின்றார். எவ்வாறு தம்மையே தூய்மையாக்கிக் கொள்வது என்பதற்கு மத்தேயு நற்செய்தியின் மலைப்பொழிவினூடாக இயேசு ஆண்டவர் அழைப்புத் தருகின்றார். தூய்மை நிலையினை எட்டிப் பிடிக்க நம்மையே நாம் பேறுபெற்றவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதே இறையழைப்பாகும். மலைப்பொழிவு கற்பிப்பது யாதெனில் "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத். 5:8). புனித வாழ்வு என்பது இறைமக்கள் அனைவருக்குமான அழைப்பு என்கிறது வத்திக்கான் .

புனித வாழ்வு என்பது இறைமக்கள் அனைவருக்குமான அழைப்பு என்கிறது வத்திக்கான் திருஅவையின் கொள்கைத்திரட்டு. "திருஅவையில் உள்ள எல்லாரும் எத்தகைய பணிப்பொறுப்பில் இருந்தாலும், அவர்கள் தங்கள் வாழ்வின் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து தூய வாழ்வு வாழ அழைக்கப் படுகின்றனர், உலகில் சிறப்புமிகு சாட்சிகளாகவும், மாதிரிகளாகவும் திகழ அழைக்கப்படுகின்றனர்" (எண். 40). அந்த வகையில் "திருப்பணியாளர்கள் தங்களது அன்றாடத் திருத்தூது அலுவல் மூலம் திருஅவையை நாளும் அதிகத் தூய்மை நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டும். இவர்கள் தங்களது அழைப்பின் மேன்மையை உணர்ந்து அதற்கேற்ற வாழ்வு வாழ வேண்டும்" என்றும், மறுபக்கத்தில் பொதுநிலையினர் குறித்து பேசுகையில்: "கிறிஸ்தவத் தம்பதியர் தங்கள் அன்பு வாழ்வினாலும், தங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்துவின் படிப்பினைகளுக்கு ஏற்றபடி வளர்ப்பதிலும், தூய்மை நிலைக்குத் தங்களை இட்டுச் செல்கின்றார்கள். மேலும் "வறுமையினாலும், வலுவின்மையினாலும், நோயினாலும், மற்றும் பற்பல துன்பங்களினாலும் ஒடுக்கப்பட்டவர்கள் அல்லது நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுபவர்கள்" போன்றவர்களுக்கு புரியும் சேவை வழியாகப் பொதுநிலையினர் அதிகமாகத் தூய்மையடைய முடியும்...இவ்வாறு அன்புச் செயல்களே தூய்மையடைய உதவும் எல்லா வழிகளுக்கும் தலையாய வழியாக உள்ளன" எனச்சங்கம் பரிந்துரைக்கின்றது (எண். 42).

மத்தேயு 5:48 "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" என்கிறது. நிறைவினை அடை யக்கூடிய வழியானது அன்பின் பாதையில் நிறைந்துள்ளது. புனிதம் என்றால் என்னவென்று தோமஸ் றொசிக்கா (Thomas Rosica) எனும் கனடா நாட்டு அருள்பணியாளர் அவர் எழுதிய John Paul II – A saint for Canada நூலில் பின்வருமாறு பதிவு செய்கிறார். முத்திப்பேறு பெற்றவராக, புனிதராக ஒருவர் அறிவிக்கப்படும்போது, அவர் கடவுளின் கருணையைச் சார்ந்து, கடவுளின் சக்தியை நம்பி, தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார், முடியாதது என்பதும், முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தார், தன் பகைவர்களையும், தன்னைத் துன்புறுத்தியோரையும் மன்னித்து வாழ்ந்தார், வன்முறைகள், தீமைகள் அவரைச் சூழ்ந்தாலும், நம்பிக்கை இழக்காமல் வாழ்ந்தார், இறுதியில், அவர் இவ்வுலகை விட்டுச் செல்லும்போது, அதை இன்னும் சற்று அழகுமிக்கதாய் விட்டுச் சென்றார் என்பதே அந்த அறிவிப்பில் அடங்கியுள்ளது." "ஒவ்வொரு புனிதருக்கும் ஓர் இறந்தகாலம் உண்டு, அவ்வாறே ஒவ்வொரு பாவிக்கும் ஓர் எதிர்காலம் உண்டு" என்கிறார். புனிதர் நிலையினை எட்டிப்பிடித்து புனிதர்களாக அறிவிக்கப்பட்டவர்கள் மட்டும்தான் புனிதர்கள் கிடையாது. இன்றும் நம்மத்தியில் எத்தனையோ நடமாடும் புனிதர்கள் வாழ்ந்த வண்ணமேதான் இருக்கின்றார்கள். தங்களது வாழ்வினால் அடுத்தவரின் வாழ்விற்கு ஒளியூட்டுகின்ற எத்தனையோ நல்ல உள்ளங்கள் இல்லாமல் இல்லை. ஒரு சிலரின் வாழ்வு நிறைவுக்கு வந்தவுடன் அவர்களையும், அவர்களது வாழ்வினையும் நாம் புகழ்ந்து வியப்படைவது ஒன்றும் மானிட வாழ்வியலுக்கு புதிது கிடையாது. இத்தகையோரே நம்மத்தியில் வாழ்கின்ற நடமாடும் புனிதர்கள். இவர்கள் ஏழைகளுக்கு உணவளிப்பதும், அனாதைகளை ஆதரிப்பதும், பள்ளிக்குழந்தைகளுக்கு கல்விக்கண் திறப்பதும், நலத்திட்ட உதவிகள் நல்குவதும், மருத்துவ உதவிகள் புரிவதும் என்று தங்கள் வாழ்வையே பிறர் அன்புப் பணிக்கென வாரி வழங்கி விடுகின்றார்கள். இத்தகை யோரையே இன்றைய நற்செய்தி பேறுபெற்ற மக்களினமென புகழ்ந்துரைக்கின்றது. இத்தகையோரே எளியமனம் படைத்தவராக, துயருறுவோராக, கனிவுடையோராக, நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோராக, இரக்கம் உடையோராக, தூய்மை உள்ளம் படைத்தோராக, அமைதி ஏற்படுத்துவோராய், நீதியின் பொருட்டு துன்புறுவோராய் தங்கள் வாழ்வினை அடுத்தவர் நலனுக்காய் அர்ப்பணிக்கும் புனித மக்களாவர். இவர்களை நமது திருத்தந்தை பிரான்சிஸ் "அடுத்தவீட்டுப் புனிதர்கள்" என்று பெயர்சூட்டி அழைக்கின்றார்கள். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்கிற இராமலிங்க வள்ளலாரைப் போன்று அடுத்தவருக்கு நல்லது புரிகின்ற அனைவருமே புனித வாழ்வினைத்தான் வாழ்கின்றோம் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். எனவே "புனித வாழ்வு" என்பது அடுத்தவருக்கு அன்புப்பணி புரிந்திட நமக்குக் கிடைத்த வாய்ப்பு என்பதனை மறந்து விடாதீர்கள். புனித வாழ்வு வாழ இயேசுகிறிஸ்து தருகின்ற அழைப்பானது "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" என்பதாகும் (லூக்கா 6:36).

மருத்துவமனையிலுள்ள நோயாளிகளின் நலத்திற்காக நாம் ஒளியாக மாறிட வேண்டும். இயேசு எனும் ஈடிணையற்ற மாபெரும் புனிதன் இதனையே இவ்வுலகில் புரிந்தார். அவர் வழியில் அவரது வழித்தோன்றல்கள் இன்றும் அப்பணியினை இடையறாது தொடர்கிறார்கள். அப்புனிதப் பணியில் புனித வாழ்வினை வாழ அழைக்கப்பட்ட நாமும் தொடர்வோம். நமது புனித வாழ்வுப் பயணத்தில் நமக்கு முன் பயணித்த புனிதர்கள் நமக்கு முன்னுதாரணங்களாக மாறட்டும். அவர்களது வாழ்வின் வழிகளைப் பின்பற்றுவோம். இரண்டாவதாக, அவர்களது பரிந்துரைக்கு நம்மையே கையளிப்போம். மூன்றாவதாக, புனிதர்களின் சமூக உறவில் இணைந்திருந்து நம்மாலான பிறரன்பு பணிகளில் ஈடுபடுவோம்.



# இளையோர் வாழ்வில் சீடத்துவம்

மறையாசிரியர் தி.ம.சந்தியோகு,வேங்கிடக்குளம், இந்தியா

**சீடர் மீது கொள்ளும் எதிர்நோக்கு சிறப்பிடம் வகிக்கும்**

இயேசு சபையை நிறுவிய புனித இக்னேசியஸ் ஓர் ஊரில் நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது சிலர் அவரிடம் வந்து " ஐயா பிரசங்கியாரே எங்கள் ஊருக்குப் பல மாதங்களாக மழை இல்லை. அன்பு கூர்ந்து உங்கள் இறைவேண்டலால் எங்கள் ஊருக்கு மழை பொழியச் செய்து தண்ணீர் பஞ்சத்தை நீக்குமே" என்றார். உடனே அவர் கூறினார், " இதை நான்தான் செய்ய வேண்டும் என்றில்லை, எனது சீடர் பிரான்சிஸ் சவேரியார் செய்வார்" என்றார். சிறிது நேரத்தில் அங்கு புனித சவேரியார் வந்தார். அவரிடம் அம்மக்கள் " எங்கள் ஊருக்கு மழை பொழிய இறை வேண்டல் செய்யுங்கள்" என்றனர். சவேரியார் முழந்தாளிட்டார். கைகளை விரித்து வேண்டினார். பெருமழை கொட்டியது. மக்கள் பேரானந்தம் அடைந்தனர். இது ஒரு சீடர், தலைவரின் (குருவின்) மனத்தில் எத்தகைய இடத்தைப் பிடித்திருந்தார் என்பதை காட்டுகிறது.

இதே போலத்தான் உயரத்திலிருந்து தவறி விழுந்த குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய தேவை புனித பாதுவா அந்தோனியாருக்கு ஏற்பட்டது. குழந்தையை நடுவானில் நிறுத்தினார். தம் தலைவரிடம் அனுமதி கேட்டார். ஓர் அரும் அடையாளத்தால் அக்குழந்தையைப் பத்திரமாகக் காப்பாற்றினார். இது வரலாறு கூறும் உண்மை. இங்கே ஒரு சீடர் ஒரு குருவுக்கு எத்தகைய மரியாதையை கொடுத்துள்ளார் என்பது விளங்குகின்றது. சீடரும் குருவும் ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் உயரிய மனநிலை–யைப் படம் பிடித்துக் காட்டும் நிகழ்வுகள் இவை.

**இன்றைய நிலையில் சீடத்துவம்.**

* தலைவர்கள் மூடர்கள் என்ற தரமற்ற பார்வை.
* தனது படிப்பினால் தம் பெற்றோர் தரம் தாழ்ந்தவர்கள் என்று கருதும் ஏளனப் பார்வை.
* ஆசிரியரைவிடத் தாம் அறிவாளி என்ற ஆணவப்போக்கு.
* ஊடகத்தைப் பற்றி எங்க ' பாஸ்சுக்கு எதுவும்' தெரியாது. அத்துறையில் ' முட்டை' தான் என எடுத்தெறிந்து பேசும் இங்கிதமற்ற பணியாளர்கள்.
* அந்தக் ' கூழ் முட்டை' சொல்வதைக் கேட்க நான் அறிவு கெட்டவரா என்ற தான்தோன்றித் தனம்.

இவையெல்லாம் எதிர்ப்பு மனநிலைக்கு எடுத்துக் காட்டுகள்.

**இன்றைய நிலையிலும் இனிய சீடத்துவம்**

அவசரகதியில் உணர்வற்ற போக்கில் வகுப்பில் ஓர் ஆசிரியர் தவறாகக் கற்பித்தாலும்

* இயேசுவின் சீடர்கள் 32 பேர்
* விமானத்தைக் கண்டு பிடித்தது றைட் சகோதரர்கள்.
* தாமஸ் அல்வா எடிசன் ஒரு படைத்தளபதி
* பிரான்ஸ் நாட்டின் சுதந்திரதினம் ஜூன் 14 (சரியான தேதி ஜூலை 14) என்பவை போன்று,

பிள்ளைகள் அதுதான் சரி. ஏனென்றால் தனது ஆசிரியர் கெட்டிக்காரர், படித்தவர், ஒருபோதும் தவறாகக் கற்பிக்காதவர் என்று மனத்தில் பதித்து பெற்றோர் சரியான விடையைச் சொன்னால் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எந்த அளவுக்கு தம் குருவாகிய ஆசிரியர் மீது பிள்ளைகள் நம்பிக்கை கொண்ட சீடராக விளங்குகின்றனர்.

* நிறுவனங்களில், அமைப்புக்களில் தலைவர்கள் கோடு போடச் சொன்னால், கற்பவர்கள் ரோடு போடும் அளவுக்குச் செயல்பாட்டாளர்களாக விளங்குகின்றனர்.
* இதனால்தான் தாய் எட்டடி என்றால், பிள்ளை பதினாறு அடி என்ற பெருமை இன்றுவரை காக்கப்படுகிறது.
* புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளார்.
* தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்றெல்லாம் சீர்மிகுந்த சீடத்துவத்தை உயர்த்திப் பிடிக்கும் காட்சிகள்.

**இளையோர் வாழ்வில் சீடத்துவத்துக்கான அழைப்பு**

" இளையோர் எதிர்கால நம்பிக்கை சுடர்மீன்கள் (நட்சத்திரங்கள்) என்று பேசப்பட்டு வந்த சூழலில் திருத்தந்தை பிரான்சிஸ் ' இளையோர் இப்பொழுது' என்று அழகாகக் குறிப்பிட்டார். 2001ம் ஆண்டு அன்றைய இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத் தலைவர் அருள்பணி. செபஸ்ரியன் அவர்கள் பாரிஸ் MEP (Rue de Bac) இல் தங்கிப் படித்துக் கொண்டிருந்த என்னை அழைத்து எமது இளையோர், அமெரிக்காவில் திருத்தந்தை இரண்டாம் யோவான்பவுல் அவர்கள் தலைமையில் இருக்கும் அனைத்துலக இளையோர் மாநாட்டுக்குப் பெருமளவில் செல்ல இருக்கி ன்றார்கள். அவர்களுக்கு ஓர் எழுச்சியுரை ஆற்ற வேண்டும். ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டால் பரவாயில்லை அது St.Denis அரங்கமே அலறுவதாக அமைய வேண்டும் என்றார். அன்று நான் எடுத்துக்கொண்ட தலைப்பு ' இளையோர் வாழ்வில் சீடத்துவத்திற்கான அழைப்பு' என்பதாகும். அதைக் கேட்டு மாநாட்டில் கலந்துகொண்ட இளையோர், இயேசுவில் இணைந்த சீடர்களாக வாழ்ந்தனர் என்பது வரலாற்று உண்மை. இதற்கான அழைப்பு இன்றும் தொடர்கிறது எப்படி???

**சான்று வாழ்வே ஊன்றுகோல்**

" நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, யெருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின்

கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (திப:8) என்று நம் ஆண்டவர் இயேசு கூறியுள்ளார்.

அவரது அழைப்பைக் கேட்டுத்தான் திருத்தூதர் பலர் பல நாடுகளுக்கும், திருத்தூதர் தோமா இந்தியாவிற்கும், திருத்தூதரைப் போலவே வாழ்வினை அமைத்துக்கொண்ட புனித யோசப்வாஸ் இலங்கைக்கும் பயணித்துச் சாட்சிய வாழ்வை மேற்கொண்டனர். அதே சாட்சிய வாழ்வையே ஊன்று கோலாகக் கொண்டிருந்தனர். இன்றைய இளையோரும் இயேசுவுக்காக அவர் அமைத்த இறையாட்சிக்காக, திரு அவைக்காகச் சாட்சியம் பகர அழைக்கப் படுகின்றனர்.

**போ, போதி, சாதி** ஆம், இன்று இரண்டு வித நற்செய்தி அறிவிப்புப்பணிகள் உள்ளன.

1. கிறிஸ்துவை அறியாதோர்க்கு அவரைப் பற்றி எடுத்துரைப்பது...
2. கிறிஸ்துவை அறிந்தும் அவரது போதனைப்படி வாழாதோருக்குக் கற்பிப்பது...

போவதாலும் போதிப்பதாலும் மட்டும் பெரும் பயன் வந்துவிடாது. தான் யார்? எதற்காக அனுப்பப்பட்டார்? என்ன செய்ய வேண்டும்? எப்படிப்பட்ட சவால்களைச் சந்திக்க வேண்டும் என்பதை அறிந்து செயல்பட்டு இயேசுவை பிறர் அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள அவரையே வாழ வழிகாட்டுகிறது.

**இல்லமே இறையாட்சித் தனம்**

'வீட்டைத் திருத்த முடியாதவர் நாட்டைத் திருத்த முடியாது. தன்னைத் திருத்த முடியாதவர் வீட்டைத் திருத்த முடியாது" என்பது உலகோர் வாக்கு. இயன்ற வரை இல்லத்தில் எல்லாருடனும் நல்லுறவு கொண்டு அதைப் பிறர் காணும், நாடிடும் சொர்க்கமாக மாற்ற இளையோர் தம் வாழ்வால் கடமைப்பட்டிருக் கின்றனர்.

**'சொந்த வாழ்வில் சொல்லிக்கொடு"**

'சொல்லுவது எல்லார்க்கும் சுலபமாகும், சொன்னபடி நிற்பவர்கள் மிகவும் சொற்பம்' என்கிறது தமிழ் பழமொழி. ஆம், ஒரு பேப்பரை எடுத்து 'சக்கரை' என்று எழுதி அதை சுவைத்துப் பார்த்தால், அது சுவைப்ப தில்லை. அந்தப் பேப்பரில் உண்மையான சக்கரையை வைத்துச் சுவைத்தால்தான் அது இனிக்கும். அதுபோல இளையோர் தாம் சொல்லும் அறிவுரையை தாம் செய்யும் அறச்செயல்களை தன்னைக் கொண்டே உணர்த்தக் கடமைப்பட்டுள்ளார். இப்படியாக. இளையோர்க்கான சீடத்துவ அழைப்பு இன்னும் தொடர்கிறது. அப்போதுதான் 'அறுவடை மிகுதி, வேலையாட்களோ குறைவு' (லூக் 10:2) என்ற இயேசுவின் ஏக்கம் நிறை வேறும்.

**சீடத்துவத்தின் அடையாளம் பறைசாற்றப்படட்டும்.**

* சொல்லுவதைச் செய்வது மட்டுமல்ல சீடர்களின் பணி குருவின் மனத்தை ஊடுருவிப் பார்த்து உழைப்பது.
* ஏற்றுக்கொள்ளாத இடங்களிலும் ஏளனம் செய்யப்படும் சூழல்களிலும் இறையாட்சியை ஓங்கி முழக்கமிடுவது.
* தன் வாழ்வில் இயேசுவை, பணத்தை, பொறுப்புணர்வை எப்போதும் காட்டுவது.
* நிறுவனம், அமைப்புக்களில் பங்கேற்கவோ, தலைமை ஏற்கவோ தயக்கம் காட்டாமல் இறைவாக்கினர் எசாயா போல இதோ நான் இருக்கின்றேன் என்னை அனுப்பும் (காண்–எசா 6:8) என்றுரைப்பது.
* உலகம் குப்பை என தருபவற்றை தேர்ந்துகொண்டு தனது பணி செய்த பவுலடியாரை முன் மாதிரியாகக் கொள்வது.
* உற்று நோக்கு, பற்றுக்கள் பெற்றுக்கொள், பறைசாற்று என்ற விதிகளைப் பின்பற்றி வாழ்ந்து காட்டுவது.

இப்படி எல்லாச் சூழல்களிலும் இறை வேண்டல், மற்றும் நன்றியுரைத்தல் வழியாக இயேசுவின் இறையாட்சியின் இனிய சீடர்களாகத் தங்களை இளையோர் அடையாளப்படுத்த இனிய நல் வாழ்த்துக்கள்.

அன்புடன் மறையாசிரியர் பேராசிரியர் தி. ம. சந்தியாகு.

## இறை வார்த்தை

கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக! முழு ஞானத்தோடு ஒருவருக்கு ஒருவர் கற்பித்து அறிவுரை கூறுங்கள். எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். (கொலோசையர் 3:16,17)

இந்த நாள் ஆசீர்வாதமாக அமைவதாக!

## சிரி.....சிரி.....சிரி



ஆசிரியர் 1– எதுக்கு சார் அந்த பையன் பெஞ்ச் மேல நிக்கவச்சு இருக்கீங்க...?

ஆசிரியர் 2 – கட்டபொம்மன் தூக்கில போட்ட இடம் எதுன்னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்.


கண்டக்டர் – விசில் அடிச்சிக்கிட்டே இருக்கேன் நீ பாட்டுக்கு போய்க்கிட்டே இருக்கே..

டிரைவர் – இங்கே மட்டும் என்னவாம்...? பிரேக் அடிச்சிக்கிட்டே இருக்கேன், வண்டி பாட்டுக்கு போய்க்கிட்டே இருக்கே.

## வயல் மாதா ஆலயத்தில் ஒன்று கூடி மகிழ்ந்த நிகழ்வு - 2025



## கண்ணீர் அஞ்சலி






## சார்ட் திருத்தலத் திருவிழா - 2025

# திரு அவையின் புனிதர்கள்

நம் வாழ்க்கை என்னும் பயணத்தில் பலமுறை வழி தெரியாமல் தவிக்கும்போது, நம் பயணத்திற்குப் பாதை காட்டுபவர்கள் நம் புனிதர்கள். எப்படியும் வாழலாம் என நினைக்கும் நம்மில் பலருக்கும், இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழும் முறையை வாழ்ந்து காட்டியவர்கள் புனிதர்கள். பல நேரங்களில் நம்முடைய ஆன்மீக வழிபாடுகளில் அச்சாணியாக இருப்பவர்களும் அவர்கள் தான். இவர்கள் திரு அவையில் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். புனிதர்களின் பாதை கடினமாய், கரடுமுரடாய், முட்களாய் தான் இருந்திருக்கிறது. புனித நிலை கிறிஸ்தவர்களாகிய நமக்கு எப்படி? சுலபமா? கடினமா? சிந்தித்தால்.... எப்போது நம் வாழ்க்கை மாபெரும் புனிதரான இயேசு என்பவரோடு பயணம் செய்யத் தொடங்குகிறதோ, அன்றுதான் அந்த புனித நிலை நமக்கு ஓர் சுலபமான வாழ்க்கையாக மாறும்.

புனிதர்கள் அன்று இயேசுவோடு நடந்தார்கள், அவரோடு இணைந்தார்கள், அவரோடு பிணைந்தார்கள், அவரைப் பற்றி மட்டுமே சிந்தித்தார்கள், தங்களது எண்ணங்களிலும், ஏக்கங்களிலும், இயேசுவையும். அவரது வார்த்தைகளையும், சுமந்தார்கள். இன்று திருஅவையில் புனிதர்களாக இருக்கின்றனர். ஆகவே, நாமும் புனிதராகலாமா? துறவிகளும், குருக்களும் திருத் தந்தையர்களும், மட்டும்தானா புனிதர்கள் ஆக முடியும்? 2ம் வத்திக்கான் சங்கம், நமக்கு ஓர் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறது. எல்லோரும் புனிதர்களாகலாம் என்ற கருத்தை பகிரங்கமாக அறிவித்தது. சாதாரண மக்களும் சமுதாயத்தில் அடித்தட்டு மக்களாக மாற்றப்பட்டவர்களும், வாழ்க்கையில் பல வழிகளில் ஒதுக்கப்பட்டவர்களும் கூட, ஏன் நாமும் நினைத்தால் புனித நிலையை வாழ முடியும்... எப்படி?

இன்று புனித நிலைக்குப் புதிய பொருள் காண வேண்டியுள்ளது. இயேசுவின் மாலைப்பொழிவு அதிலும் குறிப்பாக, பேறுகள் புனித நிலைக்கு அளவீடாக அமைகிறது.

**1. ஏழையரின் உள்ளத்தோர்:** நான், குடும்பம், செல்வம், பதவி புகழ் ஆகிய மாற்றுகளைத் தவிர்த்து, இறைவனை மட்டும் கதியாகக் கொள்வோம்.

**2. துயருறுவோர் :** பிறர் துன்பங்களைப் பகிர்ந்து நம்பிக்கை அளிப்போம்

**3. கனிவுடையோர் :** பிறருக்கு இரக்கம் காட்டுவோம்.

**4. நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர்:** நீதி ஆள வேண்டும் என்ற சிந்தனையை உள்ளத்தில் இருத்திக் கொள்வோம்.

**5. இரக்கம் உடையோர்:** வரலாற்றில் சமநிலை மறுக்கப்பட்டு தேவையில் உழல்வோருக்கு இரக்கச் செயல்கள் வழி மாண்பினைப் பெற வழி காட்டுவோம்.

**6. தூய்மையுடையோர்:** பிளவுபடா உள்ளம் உடையவர் களாய் வாழ்வில் தூய்மையைக் காப்போம்.

**7. அமைதி ஏற்படுத்துவோர்:** நீதியின் அடிப்படையில் அமைதி நிலைபெற உழைப்போம்.

**8. நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் :** பிறரது உரிமைகளை நிலை நாட்டும்போது ஏற்படும் எதிர்ப்புகளை எதிர்கொள்வோம்.

இப்பேறுகளை நமது வாழ்வில் வாழும்போது, நாம் வாழவேண்டிய முறைப்படி வாழ்கின்றவராவோம். புனித நிலையினை உரிமையாக்கிக்கொள்வோம்.

– இயேசுவில் நடப்போம்.
– தினம் ஒரு விதி செய்வோம்!
– புனிதனாக வாழ முயற்சி செய்வோம்!
என மனவுறுதி கொண்டு கிறிஸ்தவ புனித வாழ்வைக் கொண்டு மகிழ்ந்து புனிதப் பாதையில் மனிதம் மலர்ந்து புனிதமாய் புறப்படுவோம்,
– எம் தாய் திரு அவையை வளர்த்திடுவோம்! காத்திடுவோம்..!




## சிரி.....சிரி.....சிரி



ஒருத்தன் பட்டாசு வெடிச்சதும் அழுதுக்கிட்டே இருந்தானாம், ஏன்?
**ஏன்னா, அவன் வெடிச்சது வெங்காய வெடியாம்.**


ஒருத்தன் பக்கெட் நிறைய தண்ணீ நிரப்பிட்டு, ஒன்ன போட்டானாம். அத போட்டவுடனே பக்கெட்ல இருந்து தண்ணியெல்லாம் காலி ஆயிடுச்சாம், ஏன்?
**ஏன்னா அவன் ஓட்டை போட்டனாம்.**




## அப்பாவின் அன்பு

அப்பாவின் அன்பு அளவிடமுடியாதது. ஆசையுடன் அவர் அமைதியாக பேசுகையில், இன்பத்துடன் அவர் கைகளால் அணைக்கையில், ஈன்றவளின் பாசமும் பரிவும் அதில் கலந்து இருக்கும் உரிமையோடு கண்டிக்கையில் அதில் நம் நலம் தெரியும். பெண் பிள்ளைகளுக்கு முதல் ஹீரோ என்றால் அது அப்பா தான். ஒரு அம்மா பெண் குழந்தையை 10 மாதம் சுமந்து பெற்றெடுத்தாலும் கூட அந்த குழந்தைக்கு அம்மாவை விட அப்பாவின் மீது தான் அளவுகடந்த ஒரு பாசம் வருகிறது.



## ஆபத்தான வேளையில்.........

**ஒரு மரவெட்டி மரத்தின் கிளைமீது அமர்ந்து கொண்டு அந்தக் கிளையையே வெட்டினானாம். உமாதேவியார் பார்த்துவிட்டு, இவன் என்ன முட்டாளாக இருக்கிறானே, கீழே விழுந்து சாக அல்லவா போகிறான் என்று சிவபெரிமானிடம் சொன்னாராம். அதற்கு அவர், சரி அவன் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டால் நீ போய் காப்பாற்று என்னைக் கூப்பிட்டால் நான் காப்பாற்றுகிறேன் என்றாராம். இருவரும் மிகவும் கவனமாக அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அவன் இருந்த கிளை இறுதியாக முறிந்து விழுந்தது. அவன் “ஐயோ” என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் செத்துப்போனான். உமாதேவியார் « என்ன இறந்து போனானே » என்றாராம். அதற்கு சிவன் சொன்னாராம், « அவன் எமனின் மனைவி “ ஐயோ” வை அல்லவா கூப்பிட்டான். ஐயோ வந்து அவன் உயிரை எடுத்துக் கொண்டு போய்விட்டார் » என்றாராம்.**

## எலியின் வால்




ஒரு பூனை பசியால் ஓர் எலியின் வாலைக் கடித்தெடுத்துத் தின்னப் போயிற்று. அப்போது எலி, அருமைப் பூனையே, அருமைப் பூனையே அறுத்த வாலைத் திருப்பித்தர அருள் புரிவாயா?,’ என்று கேட்டது. பூனை, ‘ என் பசி தீரப் பால் தந்தால் நான் வாலைத் தருவேன்,’ என்றது.



உடனே எலி பசுவினிடம் போய், ‘ பசுவே, பசுவே, பால் தருவாயா?. பூனை பாலைக் குடித்துப் பின்னால் அறுத்த வாலைத் திருப்பித்தர அருள் புரிவாயா? என்று கேட்டது.

பசு ‘ என் வயிறு நிறைய வைக்கோல் தந்தால் நான் பால் தருவேன்,’ என்றது. உடனே எலி உழவனிடம் போய், ‘ அருமை உழவா, வைக்கோல் தா, பசு வைக்கோல் தின்று பால் தரப், பூனை பாலைக் குடித்துப் பின்னால் அறுத்த வாலைத் திருப்பித்தர அருள் புரிவையே’ என்றது. உழவன் ‘ நான் அப்பந் தின்று வயலுக்குப் போய் வைக்கோல் கொண்டு வரவேண்டும். எனக்கு அப்பந் தா,’ என்றான்.

உடனே எலி அப்பக்காரனிடம் போய், ‘ அப்பக்காரா, அப்பம் தா, உழவன் அப்பந் தின்று வைக்கோல் தர, பசு வைக்கோல் தின்று பால் தர, பூனை பாலைக் குடித்துப் பின்னால் அறுத்த வாலைத் திருப்பித்தர அருள் புரிவையே,’ என்றது.



அப்பக்காரனுக்கு இரக்கம் வந்து கொஞ்சம் அப்பம் கொடுத்தான். எலி அதை மென்றுவிடாமல் உழவனிடம் கொண்டு போய்க் கொடுத்தது. உழவன் அதைத் தின்று களிப்புடன் வயலுக்குப் போய் வைக்கோல் கொண்டு வந்து கொடுத்தான். பசு வைக்கோலைத் தின்று வயிறு நிறைந்ததனால் பால் கொடுத்தது. பூனை பால் குடித்துப் பசி தீர்ந்ததனால் எலியின் வாலைத் திருப்பிக் கொடுத்து விட்டது. எலி வாலைத் திரும்ப ஒட்டவைத்துக் கொண்டு மகிழ்ச்சியடைந்தது. *********

"எழுந்து நிமிர்ந்து நில். என் ஊழியனாகவும் சாட்சியாகவும் உன்னை ஏற்படுத்தவே...
(திப 26:16)

# வேதியர் பணியில் பொன்விழா (1975 – 2025)

**பேரன்புடையீர்!**

எமது முப்பணி மையத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாகவும் பணியாற்றி வரும் வேதியர். பேராசிரியர் திருமிகு T. M. சந்தியாகு, M.A; D.S.P.C. (பாரிஸ்) அவர்கள் தமது வேதியர் பணியில் ஐம்பது ஆண்டுகள் நிறைவு செய்வதை முன்னிட்டு இறைவனுக்கு நன்றிகூறி தமது பொன்விழாவினை கொண்டாடுகிறார். இவ்விழாவிற்குத் தாங்கள் வருகை தந்து அவரோடு இணைந்து செபித்து ஆசி வழங்க அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : தமிழக முப்பணி மையம், திண்டிவனம் | நாள் : 01.11.2025 , சனிக்கிழமை | நேரம் : காலை 11.00 மணி




**திருப்பலிக்குத் தலைமை**

**மேமிகு. பிரான்சிஸ் கலிஸ்ட்,** புதுவை - கடலூர் பேராயர்
தலைவர், தமிழக முப்பணி மையம், திண்டிவனம்

**மறையுரை**

**மேதகு அ. பீட்டர் அபீர்,** சுல்தான்பேட்டை ஆயர்
தலைவர், அனைத்திந்திய விவிலிய அருள்பணிக்குழு

**வாழ்த்துரை**

**மேதகு பிரான்சிஸ் அந்தோனிசாமி,** மேனாள் ஆயர்
கும்பகோணம் மறைமாவட்டம்



**அன்புடன் அழைக்கும்**

இயக்குநர், விவிலிய, மறைக்கல்வி, திருவழிபாட்டு செயலக அருள்பணியாளர்கள்,
அருள்சகோதரிகள் மற்றும் பணியாளர்கள்
தமிழக முப்பணி மையம், திண்டிவனம்.

## வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்!!

மாண்பு மிகு வேதியர் பேராசிரியர் TM திருமிகு சந்தியாகு அவர்களே!
உங்கள் ஈடற்ற வேதியர் பணிக்காக உங்களை வாழ்த்துகிறோம். எம் உறவுகள் பத்திரிகைக்கு நீவிர் செய்த அரும் பணிகள் அளப்பரியவை . 8 10 பக்கங்கள் கொண்ட செய்தி, கவிதை, குறுக்கெழுத்துப்போட்டி இவைகள் அனைத்தும், 3 மாதத்திற்கொரு தடவை தவறாமல் வரும் நின் சேவை கண்டு வியக்கின்றோம், பாராட்டுகின்றோம். பணியில் பொன் விழா கொண்டாடும் உங்களுக்கு இறைவன் அளித்த சகல நன்மைத்தனங்களுக்காக உங்களோடு சேர்ந்து இறைவனுக்கு நன்றி கூறும்
இலங்கைத் தமிழ் கத்தோலிக்கப் பணியகம் – பிரான்ஸ்.
வாழ்க! வளர்க!! நின் சேவை!!!

# வாழ்வின் யதார்த்தம் தான் மரணம்

மரணம் நிகழாத நாளில்லை – மரணம் நிகழாத வீடில்லை என்றே சொல்ல வேண்டும். இயற்கை மரணம், தற்கொலைகள், பேரிடர் மரணங்கள் போன்ற மரணச் செய்திகளை நாம் அன்றாடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம், பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால் தான் மரணம் என்றாலே எல்லோருக்கும் ஒருவித பயம் ஏற்படுகிறது.

மரணம் என்பது ஒரு யதார்த்தம். மரணத்தை இறப்பு என்றும், சாவு என்றும், செத்துப்போதல் என்றும் சொல்லுகிறோம். மரணமா? அது வேண்டாம் என்று எண்ணுவோரே அதிகம். காரணம், மரணம் வாழ்வில் மிகப்பெரும் இழப்பை ஏற்படுத்துகிறது. இருப்பினும் மண்ணில் பிறக்கின்ற அனைத்து உயிரும் இறப்பைச் சந்தித்தே ஆக வேண்டும். மரணம் வேண்டாம் என்று யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அதிலும் குறிப்பாக மனிதர் ஒவ்வொருவரும் இறப்பை சந்தித்தே ஆக வேண்டும். இது வாழ்வின் எதார்த்தம். மரணத்திற்கு மரணமில்லை. இதை உணர்ந்து கொண்டால் பயமில்லை.

**1. மரணம் – வலியா? வழியா?**

மரணம் ஒருவகை அமைதி. மரணம் வாழ்க்கையின் இறுதிப் பரிசு. ஆயினும் பிடிக்காவிட்டாலும் முடிவுவேளை வந்துவிட்டால் துடிக்காது போகவேண்டும் என்ற எண்ணங்கொண்டோர் பலருண்டு. ஆனால் அழையா விருந்தாளியாய் வருவதுதான் மரணம். நாடி நரம்பு தளர்ந்து போகையில், அழையா விருந்தாளியாய் நோய் வந்து சேர்கையில், மனத்திற்கு பிடித்தவர் இல்லாமல் போகையில் வரமாய்த்தான் தெரிகிறது இறப்பு. பலருக்கு மரணமே துன்பங்களில் இருந்து விடுதலை அளிக்கிறது. மரணம் துன்பங்களிலிருந்து மட்டும் அல்ல, பாவங்களில் இருந்தும் விடுதலை அளிக்கிறது. கவிஞர் ஒருவரின் கூற்று, இங்கு நினைவுகூர்வோம்.

மரணம் ஒரு நீண்ட உறக்கம். உறக்கம் ஒரு குறுகிய மரணம். மரணத்திலும் வாழ்வின் முழுமை உண்டு. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே உள்ள காலம் மனிதரின் மண்ணுலக வாழ்வு என்றால், இறப்பிற்கு அப்பாற்பட்ட வாழ்வு ஒன்று உண்டு என்பது இறைநம்பிக்கை கொண்டவர்களுடைய விண்ணுலக வாழ்வு. இதுவே நமது உறுதியான நம்பிக்கை.

புனித பவுலடிகளாரின் கூற்றுபோல, இடர் நிறைந்த இவ்வுலக வாழ்வுக்கு அப்பால் ஒரு பேரின்ப வாழ்விற்காகக் கடவுள் மனிதரைப் படைத்துள்ளார். கிறிஸ்தவ விசுவாசம் மனிதரின் மண்ணுலக வாழ்வுக்கு அர்த்தம் தருகின்றது. சாவு என்பது வாழ்வுக்கு முற்றுப்புள்ளி அன்று. மனித வாழ்வை முடிவுக்கு கொணர்வதற்கு அல்ல, மாறாக அதனை என்றென்றும் இறைவனில் நிலைத்திருக்கச் செய்வது. நிறைவு அளிப்பது மரணம் ஆகும். எனவே மரணம் ஒரு வலியல்ல. ஒரு வழி. என்றென்றும் இறைவனில் நிலைத்திருக்கச் செய்வது. நிறைவு அளிப்பது எனவே மரணம் ஒரு வலியல்ல. ஒரு வழி.

**2.** ஆன்மாக்களின் நினைவும் அன்றாடவாழ்வும் கார்த்திகை 2 கத்தோலிக்கத் திருஅவையின் ஒவ்வொரு இல்லமும் நினைவு கூரும் முக்கிய விழா. இந்த இறந்தோர் நினைவுநாள். பொதுவாக திருஅவை ஒவ்வொரு புனிதர்கள் விழாவை அவர்கள் இறந்த அன்றுதான் கொண்டாடுகிறது. புனிதர்கள் மட்டுமல்ல. எல்லா மனிதர்களும் கொண்டாடப்பட வேண்டியவர்களே! என்பதை உணர்ந்து, அவர்கள் இறந்தபின் மனித வாழ்வின் விருப்பு வெறுப்புக்களைக் கடந்த ஒரு நிலையில், அவர்கள் அனைவரையும் ஒரு சேர நினைத்து கொண்டாடும் விழாவே இறந்தோர் நினைவு விழா!

கார்த்திகை மாதம் என்றாலே கல்லறைகள் எல்லாம் அழகுபடுத்தப்படுகின்றன. புதர் அடைந்து கிடக்கின்ற கல்லறைகள் அனைத்தும் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றன. கல்லறைகள் சுத்தம் செய்தல், வெள்ளையடித்தல், இறந்தவர்களுக்கான திருப்பலி நிறைவேற்றல், கல்லறைகளைச் சந்தித்தல், இறந்தோரை நினைத்து அன்னதானம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளாக இந்த கார்த்திகை மாதம் அமைகின்றது.

* இறந்தவர்கள் என்பவர்கள் மறைந்தும் நம் கண்களை விட்டகலா மலர்கள்.
* வாழும்பொழுதெல்லாம் நம்மை செப்பனிட்ட செம்மல்கள் இறைபக்தியையும், இறை நம்பிக்கையையும் சொல்லிக் கொடுத்த தெய்வப் பிறவிகள்.
* பெற்று சீராட்டிய பெருந்தகைகள்
* உறவாடி மகிழ்ந்த சொந்தங்கள்.
* அன்பையும் சமாதானத்தையும் நமக்குள் உரமேற்றிய அருந்தவங்கள்
* மரணித்தும் நமக்காக பரிந்து பேசும் ஊமை விழிகள்
* நினையா நேரத்தில் மறைந்த நிஜங்கள்.

**3.** இது ஒரு வேறுபட்ட விழா பொதுவாக விழா என்பது கொண்டாட்டங்கள், வாழ்த்துக்கள் என மகிழ்வின் வெளிப்பாடுகளைக் கொண்டது. ஆனால் இந்த இறந்தோர் நினைவு விழா வேறுபட்ட உணர்வுகளின் திருவிழா. வேதனை வெறுப்பிலும் கூட இறையருள் தேடும் மாறுபட்ட விழா. அகால மரணமடைந்த அன்பிற்குரியவர்களை எண்ணிக் கண்ணீர் விட்டாலும், கடவுளின் கரத்தில் அவர்கள் இளைப்பாறட்டும் என்னும் பெருமூச்சின் விழா.

வாழ்ந்து முடித்தவர் என எண்ணப்பட்டவரிடம் கடவுளின் வரங்களை வாங்கித் தரும்படி வேண்டிக்கொள்ளும் வேண்டுதலின் விழா. நல்ல மரணம் என எண்ணும்படி, மரித்தவர்களை எண்ணி, இப்படி ஒரு மரணம் நமக்கும் நிகழ வேண்டும் என்னும் ஆவலைத் தூண்டும் அற்புத விழா. மொத்தத்தில் மண்ணக வாழ்வை முடித்துச் சென்றவர்கள்

மிகுதி 16ம் பக்கம்




நம் அனைவருக்கும் கார்த்திகை இரண்டு என்றாலே நினைவுக்கு வருவது கல்லறைத் திருநாள் அல்லது அனைத்து ஆன்மாக்கள் தினம் ஒவ்வோராண்டும் கார்த்திகை மாதம் 2ம் திகதி அனைத்து ஆன்மாக்கள் தினமாக தாய் திருஅவை சிறப்பிக்கின்றது. இதுவரை கண்டு கொள்ளப்படாத கல்லறைகள் சுத்தம் செய்யப்பட்டு மெழுகுவர்த்தியேற்றி பூமாலைகளால் அழகாக அலங்கரிக்கப்படுவது வழக்கம். எதற்காக இந்த நாள்? ஏன் இந்த நாளில் நாம் இவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்?

நம் மனித வாழ்வில் மரணம் என்பது ஒரு முடிவல்ல. மாறாக அது ஒரு இளைப்பாறுதல் மட்டுமே. விவிலியத்தில் மரித்த இலாசர் (யோவா 11:11) மற்றும் யாயீர் மகளை (மாற் 5:39) உயிர்ப்பித்த பொழுது அவர்கள் உறங்குகிறார்கள் என்று கூறித்தான் தூக்கத்திலிருந்து ஒருவரை எழுப்புவதுபோல் இலாசரையும் அச்சிறுமியையும் ஆண்டவர் உயிரோடு எழுப்பினார்.

கருவறையும் கல்லறையும் கடவுளால் படைக்கப்பட்டவை தான். இரண்டும் ஒன்றுக்கொன்று இணையானது, தொடர்புடையது. இரண்டுமே இருள் படர்ந்துதான் இருக்கும், ஆனால் அவை அத்தோடு முடிவதில்லை. மாறாக கருவறையிலிருந்து வெளிவரும்போது புதுவாழ்வு பிறக்கின்றது. கல்லறையிலிருந்து வெளிவரும்போது நிலை வாழ்வு உரிமைப் பேறாகக் கிடைக்கின்றது. இரண்டுமே வாழ்வை நமக்குத் தருகின்றன. இந்த ஒரு உன்னதமான நிலையை நாம் ஒவ்வொருவருமே இறைவன் இயேசுவின் இவ்வுலக வாழ்விலிருந்தும், அவர் செய்த புதுமைகளி லிருந்தும் கண்டுணர முடியும். இதற்கு முன்னடையாளமாக அமைவதுதான். அதாவது கடவுளால் இறந்தவர் உயிர்பெற்றெழுவர் என்பதை உணர்த்தும் விதமாக வருவது தான். விவிலியத்தில் நாம் வாசிக்கும் பன்னிரண்டு வயது சிறுமி உயிர்பெறும் நிகழ்வும் (மாற் 5:41). மரித்த இலாசர் உயர்பெறும் நிகழ்வும் (யோவா 11:43) ஆகும். இந்நிகழ்ச்சிகள் நமது வாழ்வில் மரணம் ஒரு முடிவல்ல, நமது வாழ்வு மரணத்தோடு நின்றுவிடுவதல்ல, மாறாக மரணத்தையும் தாண்டி நிலைவாழ்வை பெறுவதாகும் என்பதைக் குறிக்கிறது. எனவே இந்த ஆன்மாக்கள் தினமானது நம் ஒவ்வொருவரையும் புது நிறைவாழ்வை நோக்கிய பாதையில் பயணிக்க அழைப்பு விடுக்கின்றது. எனவே கல்லறைகள் வாழ்வின் முடிவிடங்கள் அல்ல. வாழ்வின் பிறப்பிடங்கள். முடிவில்லா இறந்து போன ஆன்மாக்களுக்காகவும், உத்தரிக்கிற ஸ்தலத்தில் துன்பப்படும் ஆன்மாக்களுக்காகவும், யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் இந்த சிறப்பு தினத்தில் மன்றாடுவோம். ❋❋❋❋❋❋❋❋❋❋


**15ம் பக்கத் தொடர்ச்சி – வாழ்வின் யதார்த்தம்தான்...**

விண்ணக வாழ்வை அடைந்து தனக்கும் அந்த அருளினை அடைந்து தரும்படி மண்ணக வாழ்வை தொடர்வோர் எடுக்கும் ஒரு எதிர்பார்ப்பின் விழா.

4. அன்றாட வாழ்வின் தொடர வேண்டிய ஆன்மாக்களின் நினைவு என்றைக்கோ எண்ணிப்பார்த்து, மலர்கள் தூவி, மணம் பரப்பும் மாலை அணிவித்து, மற்றவர் வியக்க மன்றாடிக் கொள்வது மட்டுமல்ல இத்திருவிழா. அன்றாட வாழ்வுக்கு பாடம் பெற்றுக் கொள்ள கற்றுத்தரும் ஒரு தினசரித் திருவிழா இது. வாழ்வின் யதார்த்தம் தான் மரணம் தினமும் விழிக்கிறோம்! எப்படியும் விழித்தே ஆக வேண்டும் என்பதால் உறங்கச் செல்கிறோம் எப்படியும்! மீண்டும் விழிக்க வேண்டுமே என்பதால் மாறாக நாம் பார்த்த, கேட்ட, உணர்ந்த நம்மவரின் இல்லாமையை தினம் ஒருமுறை நினைத்துப்பார்ப்போம். எப்போதும், எப்படியும், எந்த நொடியும் மரணம் வரலாம் என்பதால், வாழும் நிமிடங்களை அர்த்தமுள்ளதாக்க வேண்டும் எனும் ஆர்வம் நம்மிடையே கொந்தளித்து கிளம்ப, அன்றாட வாழ்வும் கூட அற்புதமாகத் தெரிய ஆரம்பிக்கும். வாழும் வாழ்வுக்கு அர்த்தம் கண்டு பிடிக்க, வாழ்ந்து முடித்தவர்களை தினமும் சில நொடிகள் நினைத்துப் பார்த்தாலே போதுமே.

5. எப்போது அர்த்தம் பெறும் இந்நினைவு? கல்லறைகள் சுத்தம் செய்து அழகூட்டுவதால் மட்டுமல்ல. கல்லறைக்கு போகும் உள்ளத்தை அழகுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தில் தீபத்தாலும், தூபத்தாலும் உண்டாகும் நறுமணத்தினால் மட்டுமல்ல, நம் வாழ்வின் நன்மை மற்றவருக்கும் நலன் தரவேண்டும் என்னும் எண்ணம் நம்மில் பரவுவதாலும், இறந்தோருக்காகச் செய்யப்படும் உணவு படையல்கள், நினைவுத் திருப்பலிகளில் மட்டுமல்ல, அவர்களிடம் விளங்கிய நல்லவைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதிலும், எடுத்துக் காட்டுவதிலும் தான் இருக்கிறது. இத்திருவிழாவின் உண்மைப் பொருள். மரபுகள் உடல் வழி உயிர் வழி பரிமாண மாற்றத்தோடு நின்றுவிடுவதில்லை. மதிப்பீடுகளின் மாற்றமே உண்மை யான மரபுவழித் தோன்றல்கள். உருவத் தோற்றங்களே உண்மை மாற்றங்கள் என்று எண்ணியது போதும். உலகை மாற்றும் உன்னத உயிர் துடிப்புகளாக மாறுவோம்.

**வாருங்கள் நண்பர்களே!**
**நேற்றைய இறந்தோரிடமிருந்து இன்றைய வாழ்வுக்கான பாடங்களை எடுத்துக் கொண்டு நாளைய தலைமுறைக்கு நல்வழி காட்டக்கூடியவர்களாய் கொண்டாடுவோம் இறந்தோரின் நினைவை...**



**இந்த ஏழை கூவியழைத்தான் ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார். (திபா 34: 1)**

# விடாமல் கேட்போம்! அவரும் நம்மை விடமாட்டார்!



தொடக்க நூல் 28:15– நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச் செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிட மாட்டேன் என்றார்.

இது ஒரு கற்பனை கதை. ஒரு முறை இயேசுவும் பேதுருவும் பக்கத்து ஊரிலே நற்செய்தி அறிவிக்க சென்றுகொண்டிருந்தார்களாம். போகிற வழியிலே 3 மாடு வண்டிகள் சேற்றிலே புதையுண்டு வெளி வருவதற்கு போராடிக் கொண்டிருந்ததாம். முதல் மாட்டு வண்டிக்காரன் மாட்டினை அடிப்பதும், கடவுளை பழித்துரைத்தும் கொண்டிருந்தான். இயேசு அவனை கண்டுக்கவே இல்லை. இரண்டாமவன் மாட்டினை துன்புறுத்தவில்லை, அதை வெளியே எடுக்க முயற்சியும் செய்யவில்லை. ஆனால் கடவுளிடம் மட்டும் உருக்கமாக வேண்டி கொண்டிருந்தானாம். இயேசு அவன் அருகில் சென்று அவனை ஆசீர்வதித்துவிட்டு கடந்து சென்றாராம். மூன்றாமவன் ஒரு பக்கம் கடவுளிடம் வேண்டினான், இன்னொரு பக்கம் தனது சக்தியை எல்லாம் திரட்டி அந்த மாட்டினை காப்பாற்ற முயன்றான். இயேசு அவனருகில் சென்று அவனோடு தோள் சேர்ந்து உதவி செய்தாராம். இதை பார்த்த பேதுரு மற்ற 2 நபர்களும் தானே கஷ்டபட்டு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உதவாமல் இவனுக்கு மட்டும் ஏன் உதவி செய்தீர்கள் என்றார்? அதற்கு இயேசு முதல் மனிதன் கடவுள் மீதும் நம்பிக்கை இல்லாமல் மாட்டின் மீதும் அக்கறை இல்லாமல் இருந்தான். எனவே அவனுக்கு என் உதவி தேவைப்படவில்லை. இரண்டாமவன் என் மீது நம்பிக்கை கொண்டிருந்தான், ஆனால் மாட்டினை விடுவிக்க முயற்சிகூட செய்யவில்லை. எனவே அவனுக்கும் என் உதவி தேவைப்படவில்லை. மூன்றாமவன் ஒரு பக்கம் நம்பிக்கை கொண்டான், இன்னொரு பக்கம் தன் முழு பலத்தையும் பயன்படுத்தி முயற்சி செய்தான் . அவனுக்கு தான் என் உதவி தேவைப்பட்டது என்றாராம்.

இன்றைய முதல் வாசகத்தின் மூலம் பிறருக்காகப் பரிந்து பேசி மன்றாடும் பரிந்துரையாளராக நம் முன் நிமிர்ந்து நிற்கிறார் ஆபிரகாம். அவரே பரிந்துரை மன்றாட்டுகளின் பாதுகாவலராகவும் திகழ்கிறார். சோதோம், கொமோரா நகர்களை ஆண்டவர் அழிக்கத் திருவுளம்கொண்டபோது, ஆபிரகாம் அந்த மக்களுக்காகப் பரிந்து பேசி, இறைவனிடம் மன்றாடுகிறார். பரிந்துரை மன்றாட்டிற்கு இலக்கணமும் வகுக்கிறார். இறைவனோடு ஒன்றித்து, நல்லுறவு கொள்பவர்களே பரிந்துரைக்கத் தகுதி பெற்றவர்கள். இறைவனைப் பல்வேறு விதங்களில் ஆபிரகாம் புகழ்ந்துரைப்பதைப் பார்க்கிறோம். தலைவரே, அனைத்துலகிற்கும் நீதி வழங்குபவர் என்று அழைத்து இறைபுகழ் பாடுகிறார். **நமது மன்றாட்டுகள் இறைபுகழ்ச்சியைத் தொடர்ந்தே வர வேண்டும். அதேபோல் ஆபிரகாம் மனந்தளர்ந்து விடவில்லை. மீண்டும், மீண்டும் இறைவனோடு உரையாடி, வாதாடி, அந்த நகர்களிலுள்ள மக்களுக்காக மன்றாடுகிறார். பரிந்துரை மன்றாட்டுகள் இவ்வாறே செபிக்கப்பட வேண்டும்.**

கர்த்தர் கற்பித்த செபம் எனவும், இயேசு கற்றுத் தந்த இறைவேண்டல் எனவும் அழைக்கப்படுகின்ற மன்றாட்டு, மத்தேயு நற்செய்தியிலும் லூக்கா நற்செய்தியிலும் சிறிது மாறுபட்ட வடிவத்தில் உள்ளன (காண்: மத் 6:9– 15 லூக் 11:2–4). **கடவுளை நாம் தந்தை என அழைக்கும்படி இயேசு கேட்கின்றார். கடவுளைத் தந்தை என அழைப்பதன் பொருள் மூன்று விதங்களில் வெளிப்படுகிறது: அதாவது, கடவுள் அனைத்தையும் படைத்தவர், அனைத்தையும் ஆள்பவர், அனைத்தையும் பேணிக்காப்பவர். இவ்வாறு மனிதருக்கு அனைத்து நலன்களையும் அளித்து, அவர்களைக் காப்பவர் என்பதால் கடவுளைத் தந்தை என அழைப்பது பொருத்தமே.** ஆண்வழி சமுதாயத்தில் ஆணாதிக்கம் நிலவிய பின்னணியில் கடவுளைத் தந்தை என அழைத்து, அதிலிருந்து ஆண்கள் பெண்களை அடக்கி ஆள்பவர்கள் என நாம் பொருள்கொண்டு, கடவுளை அப்பாணியில் ஓர் ஆணாகவும் தந்தையாகவும் உருவகிப்பது தவறாகும். ஏனென்றால் விவிலியம் காட்டுகின்ற கடவுள் இத்தகைய ஆணாதிக்கக் கடவுள் அல்ல. கடவுள் நம் தந்தை என்பதன் உண்மைப் பொருள், அவர் நமக்கு ஊற்றாகவும் தோற்றுவாயாகவும் இருக்கிறார் என்பதும், நம்மை அன்போடு பராமரித்துக் காக்கிறார் என்பதும் ஆகும். இப்பண்புகளை நாம் பெண்மைக்கும் ஏற்றி உரைக்கலாம். எனவே கடவுள் நமக்குத் தந்தையும் தாயுமாக இருக்கிறார் என நாம் கூறமுடியும். அதுமட்டுமல்ல, கடவுள் தம் ஆட்சியில் நாம் பங்கேற்க வேண்டும் என்றால் ஒரு சிறு குழந்தைபோல நாம் மாற வேண்டும் எனக் கேட்கின்றார். எனவே, ஆட்சி அதிகாரமும் அடக்குமுறையும் கடவுளின் பண்பல்ல, மாறாக அன்போடு அனைவரையும் அரவணைத்து, தாழ்த்தப்பட்டோரையும் மறுக்கப்பட்டோரையும் மதித்து ஏற்கும் பண்பே கடவுளின் உள்ளார்ந்த இயல்பு. இவ்வாறு நாம் கடவுளை உருவகித்து, அவரை அணுகும்போது நம் உள்ளத்தில் பிள்ளைக்குரிய பாசமும் பணிவும் தோன்றும். கடவுளின் பாதுகாப்பு நமக்கு எப்போதும் உண்டு என்னும் உணர்வும் நம்மில் ஆழமாக வெளிப்படும்.

**மிகுதி 19ம் பக்கம்**



# முடிவு மயக்கம்

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

துடிப்பான இளைஞன் துல்லியமான தொழிலாளி. பேச்சில் இனிமை பேச்சுத் துணையில் புதுமை. ஒளிரும் எதிர்காலம் அவன் கண்களில் தெரிந்தது. அருகில் சென்றேன் ஆர்வத்தோடு புன்னகைத்தேன். "என்ன செய்கிறாய்? என்று ஆவலோடு வினவினேன். பொறியியல் படித்திருக்கிறேன் என்று மலர்ந்த முகத்தோடு மீசையை முறுக்கினான். "எங்கே வேலை செய்கிறாய்? என்ற கேள்விக்கு "வேலையில்லை என்று வாடிய முகத்தோடு குறுகினான். நம்ப முடியவில்லை. ஏனென்றால் இளைஞனின் இயக்க நிலை ஏறுமுகத்தில் இருந்ததைப் பார்த்தேன். ஒரு சஞ்சலமும் இல்லாமல் இருந்ததைப் பார்த்தேன். வேலையில்லை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. குழப்பத்தில் சிறிய குமுறுத–லோடு தொடர்ந்தேன் "வேலை தேடவில்லையா?. "தேடினேன் ஆனால் நான் நினைத்தது கிடைக்கவில்லை என்று முணங்கினான். சிறிது அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் குறுக்கிட்டேன் "என்ன தேடினாய்? « நிறுவன மேலாளர் ஆகவேண்டும் அதுதான் எனது கனவு » என்று சொல்லி முடித்தான். அவனது கனவு நியாயமானது தான் ஆனால் எந்த ஒரு முயற்சியும் செயல்முறையும், பயிற்சியும், பட்டறிவும் இல்லாமல் கனவையே முதலும் முடிவுமாக பார்ப்பது, ஆச்சரியம் மட்டுமல்ல சிறிது வருத்தம் தரக்கூடிய இன்றைய எதார்த்தமும் கூட. இன்றைய இளையோர் முடிவையே முதலாகப் பார்ப்பது அவர்கள் முடிவு மயக்கத்தில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

**முடிவு என்பது ஒரு நபர் ஒரு செயலைத் தொடங்கி அதில் பல ஏற்றத்தாழ்வுகள் கண்டு பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு பட்டறிவால் பல வாழ்க்கைப் பாடங்களைக் கற்று ஆயிரம் தடைகளைத் தாண்டி தன்னம்பிக்கை பெற்று ஆளுமையால் ஆற்றுப்படுத்தப்பட்டு இறுதியில் இலக்கைத் தனதாக்குவது.**

ஒரு சிறு குழந்தை நடக்க பழக வேண்டுமென்றால், தவழ்வது தவறி விழுவது விழுந்து எழுவது என்ற தொடர் சவால்களை தன்வயப்படுத்த வேண்டும். பின்பு அதை எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும். வாழ்க்கை ஓட்டத்தில் வெற்றிப் பாதைகளால் தடம் பதித்தவர்கள் அனைவருமே சோதனைகளைச் சந்தித்தவர்கள், சோர்ந்து விழுந்தவர்கள், சோகத்தில் சொக்கியவர்கள். ஆனால் அவர்கள் மீண்டும் எழுந்தார்கள், தொடந்து நடந்தார்கள், தூரத்தில் இருக்கும் முடிவை இலக்கை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்தார்கள், வெற்றிகொண்டார்கள். ஆனால் இன்று இலக்கை நோக்கி நடக்க மனமில்லாதவர்களாய் இலக்கு நம்மை நோக்கி வரவேண்டும் என்ற மெத்தனப்போக்கில் மார்க்கம் அறியா மனிதர்களாக மாறி இறுதியில் நடக்க திராணி இல்லாமல் அன்னநடை போடும் மந்த மனிதர்களாக மாறிவரும் நிலை மிக வருத்தமே.

**நமது கனவுகளை முடிவிலிருந்து தொடங்கவேண்டும் முடிவில்தான் நமது எண்ணம் அனைத்தும் ஒரு சேர இருக்கவேண்டும்.**

இலக்குதான் நமது கனவு என்றெல்லாம் நமக்கு ஊக்கமளிக்கும் பேச்சுக்களை கேள்விப்பட்டிருக்கின்றோம். தீயாக கொழுந்துவிட்டு எரியும் இவ்வெண்ணங்கள் நம்மை இலக்கு நோக்கி உந்தித்தள்ளும் என்பதை நாம் சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இன்று முடிவுகளையே முதலாக பார்க்கும் மனநிலை முதல்படிகளை முற்றுப்படிகளாக முறுக்கிவிடும். மூளைச் சலவை முதல் இல்லாத முடிவுகள் இவை அனைத்துமே நம்மை வேர்கள் இல்லாத மரங்களாக, அடித்தளம் இல்லாத வீடுகளாக, தன்னம்பிக்கை இல்லாத தற்பெருமை போற்றும் வெற்று மனிதர்களாக மாற்றிக்கொண்டு இருக்கிறது என்பதுதான் உண்மை. படித்தவன் ஒருவன் தனது படிப்பிற்கு ஏற்ற வேலை தேட தெரியாதவனாய், படிக்காத பெற்றோர்கள் அவர்களுக்குத் தெரிந்தவர்களிடம் பிள்ளைகளின் வேலைக்காக தாங்கி நிற்பது இன்றைய காலத்தின் சங்கடம்.

கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர்பிச்சை நமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் கருணைக்கு பெயர் போன அன்னை தெரசா என்று பல மாமனிதர்கள் நமது இளையோர் மனங்களைக் கொள்ளை கொள்கின்றனர். அவர்களைப் போல் இந்த சமூகத்தில் உச்சம் தொடவேண்டும் என்று கனவு இளையோரை இயக்குகிறது. மாற்றத்தின் கனவுகள் இவை. ஆனால் மாமனிதர்கள் தொட்ட உச்சம் மட்டுமே இன்றைய இளையோர் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது அவர்கள் கடந்து வந்த பாதைகளை இவர்கள் மறந்து விடுகின்றனர். முடிவு மட்டுமே இலக்கு, முடியாமல் தவித்த தருணங்களுக்கு முழுக்கு என்ற தப்புக் கணக்கு தவிப்பு.

எனது நண்பர்களில் பலர் தங்களது வாழ்க்கையின் முதல் பகுதியைப் பல அவமானங்களால் செதுக்கினார்கள் பின்னர் அவை அனைத்துமே அவர்களைத் தாங்கிப் பிடிக்கும் ஆபரணங்களாக மாறிவிட்டன என்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். ஆக! முடிவில் மயங்கிவிடாமல் முதலில் நமது வாழ்க்கையை முதலீடு செய்வோம். முதலில் தொடங்கி பல பயணங்கள் செய்து பட்டறிவால் பட்டம் வாங்கி முடிவுக்கு செல்வோம்! அப்போது முடிவு மேலும் பல முதல் படிகளை நமக்கு பரிசளிக்கும்.

## இஞ்சி துவையல் சாப்பிடுங்க....!

### ஜீரண சக்தி அதிகரிக்க....

**இரத்த நாளங்களின் செயல்பாட்டை மேம்படுத்தி மாரடைப்பு நேராமல் இஞ்சி தடுக்கிறது...!**



தலைவலியைப் போக்கி இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது. கொழுப்புச்சத்தைக் குறைத்து, மைய நரம்பு மண்டலத்தைத் தூண்டி இருதய, சுவாசத்தசைகள் சீராக இயங்க உதவுகிறது. மலச்சிக்கல் ஏற்படுவதைத் தடுத்து செரித்தலைச் சீராக்கி வயிற்றுவலி ஏற்படுவதைத் தடுக்கிறது. சுவை யான இஞ்சி துவையல் எப்படி செய்வது என்பதைப் பார்க்கலாமா?

**தேவையானவை:** இஞ்சி – சிறிய துண்டு, தேங்காய் துருவல் – அரை கப், காய்ந்த மிளகாய் – 3, புளி – சிறிதளவு, உளுத்தம் பருப்பு – ஒரு டேபிள் ஸ்பூன், கடுகு – கால் டீஸ்பூன், கறிவேப்பிலை –சிறிதளவு, எண்ணெய், உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:** இஞ்சியை சுத்தம் செய்து நறுக்கிக் கொள்ளவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு காய்ந்த மிளகாய், தேங்காய் துருவல், உளுத்தம்பருப்பு, இஞ்சி ஆகியவற்றை சேர்த்து வறுக்கவும். இதனுடன் புளி, உப்பு, சிறிதளவு நீர் சேர்த்து மிக்சியில் அரைக்கவும். பின்னர் வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, அரைத்த கலவையை சேர்த்து வதக்கினால் சுவை யான இஞ்சி துவையல் தயார். இதை மூன்று, நாட்களுக்கு வைத்திருந்து பயன்படுத்தலாம்

17ம் பக்கத் தொடர்ச்சி

**கேளுங்கள் தேடுங்கள், தட்டுங்கள் போன்ற வார்த்தைகள் நாம் செய்ய வேண்டிய செயல்களைக் குறிக்கக்கூடிய சொற்களாக இருக்கிறது. இந்த சொற்களின் அடிப்படையான பொருள்: முயற்சி. முயன்றால் நாம் பெற முடியாதது ஒன்றுமில்லை. அந்த முயற்சி தான், நமது விசுவாச வாழ்வின் அடித்தளம். அந்த முயற்சியைப் பற்றிப்பிடித்து விட்டால், நாம் இந்த உலகத்தில் அடைய நினைப்பதை நிச்சயமாக அடைய முடியும்.**

**நாம் முயற்சி எடுக்க வேண்டும். ஒருபோதும் சோம்பேறிகளாக வாழக்கூடாது. எதிர்மறை சிந்தனை உடையவர்களாக இருக்கக் கூடாது. இந்த உலகத்தில் நம்மை விட எத்தனையோ பேர் குறைகளோடு படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடவுளிடத்தில் முறையிடுவதற்கும், சண்டை போடுவதற்கும் எவ்வளவோ இருக்கிறது. அது நமது பார்வையில் நியாயமான தாகக் கூட தோன்றலாம். ஆனால், அவர்கள் அதையெல்லாம் பற்றி எண்ணுவதை விட்டுவிட்டு, மிக உறுதியாக வாழ்வில் முயற்சி எடுத்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். வாழ்வை மகிழ்வோடு வாழ்ந்திருக்கிறார்கள். தடைகளையும், சோதனைகளையும் வலிமையோடு வென்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே நமக்கு சிறந்த உதாரணங்களாக வாழ்வில் இருக்கிறார்கள்.**

**கடவுள் நமக்கு கொடுத்திருக்கிற வாழ்வை, நாம் ஒருமுறை தான் வாழ முடியும். அந்த வாழ்வை நாம் முயற்சியோடு வாழ்வோம். எந்த சூழ்நிலையிலும் துவண்டுவிடாது, நம்பிக்கையை பற்றிப் பிடித்துக் கொண்டு, தொடர்ந்து முன்னேறுவோம். எதனையும் கருத்தில் கொள்ளாமல் முயன்று, வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.**

## தூயவராய் இருங்கள்! ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!!"



தூயவராய் இருங்கள்! ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!!" என்பதை உணர்ந்து அவரின் திட்டத்திற்கேற்ப வாழும்போதும், வாழ முயற்சி செய்யும் போதும், நாமும் தூயவராகிறோம். நடமாடும் புனிதர்களாகின்றோம். அதனால்தான் திரு அவை தொடக்ககாலக் கிறிஸ்தவர்களை ஹாகியோஸ் என அழைத்தது. ஹாகியோஸ் என்றால் கிரேக்க மொழியில் புனிதர் என்று பொருள். ஆம் நவம்பர் மாதம் முதலாம் திகதி அனைத்து புனிதர்களையும் நினைவு கூறுகின்றோம். அவர்களிடம் பரிந்து பேசுமாறு மன்றாடுகின்றோம்.

**நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.**

# திரு அவைச் செய்திகள்

## உலகளாவிய தன்மை, இரக்கத்தின் பரிமாணத்தை எடுத்துரைக்கும் யூபிலி



திருஅவையின் உலகளாவிய தன்மையின் பரிமாணம் மற்றும் இறை இரக்கத்தின் பரிமாணத்தை எடுத்துரைக்கும் வண்ணம் யூபிலி ஆண்டானது இருக்கின்றது என்றும், கிறிஸ்துவின் இதயத்திலிருந்து பாயும் இரக்கத்தின் பரிசைப் பற்றிய தீவிர விழிப்புணர்வைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ. மனித மேம்பாட்டிற்காகவும், கடவுளின் மகிமைக்காகவும், நாம் ஒருவருக்கொருவர் செவிசாய்த்து, ஒவ்வொரு நம்பிக்கையாளர்களிடமும் தூய ஆவியார் தூண்டுவதை மதிக்கும்போது, கிறிஸ்துவின் அரசைக் கட்டியெழுப்புவதில் ஒன்றாகச் செயல்பட்டு, காலத்தின் அடையாளங்களை அதிக தெளிவுடனும் நம்பிக்கையுடனும் நாம் உணர்கிறோம் என்றும் கூறினார் திருத்தந்தை.




எதிர்நோக்கின் பயணம் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக நம்மை உருவாக்கட்டும். இன்று உலகிற்கு நம்பிக்கை தேவை. அதனால்தான் இயேசுவைச் சந்தித்து, நமது வாழ்க்கையின் மையத்திலும், உலக வாழ்க்கையின் மையத்திலும் அவரை மீண்டும் வைக்க திருப்பயணிகளாக நடப்போம். சிறந்த உலகத்திற்கான நம்பிக்கையை வைத்திருங்கள். கிறிஸ்துவோடு ஐக்கியமாகி, உங்கள் முயற்சிகள் பலனளிக்கும் என்பதில் உறுதியாக இருங்கள் என்றும், நற்செய்தியின் வெளிச்சத்தில் ஒவ்வொரு நபரின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும் சிறப்பாக நம்மைத் தயார் செய்ய உதவட்டும் என்றும் கூறினார் திருத்தந்தை

## இலக்கை நோக்கிப் பார்த்துப் பயணிப்பவர்களாக வாழ்வோம்

வாழ்க்கையின் இறுதி அர்த்தத்தைத் தேடுவதற்கான அடையாளமாக திருப்பயணங்கள் வெளிப்படுத்துகின்றன

நம்பிக்கையின் எதிர்பார்ப்பு கொண்டவர்களாக, தேவையிலிருக்கும் மக்களுக்கு உதவுபவர்களாக நாம் இருக்க வேண்டும் என்றும், இலக்கை நோக்கிப் பார்த்துப் பயணிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அக்டோபர் 23 வியாழனன்று காலை வத்திக்கான் தூய ஆறாம் பவுல் அரங்கத்தில் எருசலேம் திருக்கல்லறை சபை சகோதர சகோதரிகளைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை அவர்கள், திருக்கல்லறையைப் பாதுகாக்கவும், திருப்பயணிகளைப் பராமரிக்கவும், எருசலேம் ஆலயத்தை காக்கவும் நிறுவப்பட்ட அவர்களது சபையைச் சார்ந்தோருக்குத் தனது வாழ்த்துக்களைக் கூறினார்.

கடவுளுடைய கல்லறையில் எதிர்நோக்கின் நம்பிக்கையை நிறுத்துவது என்பது, எந்த மனித சக்தியாலும் வெல்ல முடியாத, தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடவுள் மீதான நமது நம்பிக்கையைப் புதுப்பிப்பது என்றும், ஆணவமும் வன்முறையும் உண்மையை விட மேலோங்கி நிற்கும் உலகில், உண்மைக்கு சாட்சியாக வாழ நாம் அழைக்கப்படுகின்றோம் என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ. வன்முறை மோலோங்கி இருக்கும் உலகில், வாழ்க்கை இறப்பை வெல்லும், அன்பு வெறுப்பை வெல்லும், மன்னிப்பு பழிவாங்கு எண்ணத்தை வெல்லும், இரக்கமும் அருளும் பாவத்தை வெல்லும் என்ற உண்மைக்கு சாட்சியாக வாழ வலியுறுத்தினார் திருத்தந்தை.

“ பந்தயத்திடலில் ஓட வந்திருப்போர் பலர் ஓடினாலும் பரிசு பெறுபவர் ஒருவரே. இது உங்களுக்குத் தெரியாதா? எனவே, பரிசு பெறுவதற்காகவே நீங்களும் ஓடுங்கள். பந்தயத்தில் போட்டியிடுவோர் யாவரும் அழிவுறும் வெற்றிவாகை சூடுவதற்காகத் தன்னடக்கப் பயிற்சிகளில் ஈடுபடுவர். நாமோ அழிவற்ற வெற்றிவாகை சூடுவதற்காக இப்படிச் செய்கிறோம். நான் குறிக்கோள் இன்றி ஓடுபவரைப்போல ஓடமாட்டேன். காற்றைக் குத்துபவரைப்போலக் குத்துச் சண்டை இடமாட்டேன். பிறருக்கு நற்செய்தியை அறிவிக்கிற நானே தகுதியற்றவனாக மாறிவிடாதவாறு என் உடலை அடக்கிக் கட்டுப்படுத்துகிறேன்” என்ற திருத்தூதர் பவுலின் வார்த்தைகளுக்கேற்ப இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார் திருத்தந்தை.

# தாயகச் செய்திகள்

## யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் சபையினரின் உயர் மாநாடு



யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் சபையினரின் உயர் மாநாடு மாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் அவர்களின் தலைமையில் 16 ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை மன்னார் ' ஞானோதயம்' அமலமரித்தியாகிகள் இல்லத்தில் நடைபெற்றது.

அமலமரித் தியாகிகளின் வாழ்வையும் பல்வேறுபட்ட பணிகளையும் சிந்தித்து எதிர்காலப் பணிகளை திட்டமிடும் செயலமர்வாக முன்னெடுக்கப்பட்ட இம்மாநாட்டின் ஆரம்பநாள் நிகழ்வுகளில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, கொடிகள் ஏற்றப்பட்டு மாநாட்டு கீதம் இசைக்கப்பட்டு, அறிமுக உரைகளுடன் நற்கருணை ஆராதனை இடம்பெற்றது. இந்நிகழ்வில், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்ணான்டோ, யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அநுராதபுர மறைமாவட்ட ஆயர் அமலமரித்தியாகிகள் சபை பேரருட்தந்தை நோபேட் அன்றாடி, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ந்து இரண்டாம் நாள் நிகழ்வுகளில் அமல மரித்தியாகிகளின் உருவாக்கம் அவர்களின் பணி பற்றிய கலந்துரையாடல், அனுபவ பகிர்வுகள் என்பன இடம் பெற்றதுடன் அமலமரித்தியாகிகளின் சட்டமும் ஒழுங்கும் திரு அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 199ஆம் ஆண்டு நிறைவை சிறப்பித்து கொழும்பு மாகாண முதல்வர் அருட்தந்தை றொசான் சில்வா அவர்களால் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை முன்னெடுக்கப்படும் இவ்உயர் மாநாடு இவ்வருடம் 2025ஆம் யூபிலி ஆண்டில் இயேசு சபை அருட்தந்தை ஜெயராஜ் இராசையா அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 85க்கும் அதிகமான யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் பங்கு பற்றியிருந்த இம்மாநாடு இவர்களின் வாழ்விலும், பணியிலும் புதிய பார்வையுடன் கூடிய உத்வேகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்த வழிகோலியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மறையாசிரியர்களுக்கான சிறப்பு நிகழ்வு

குருநகர் மற்றும் புனித அடைக்கல அன்னை ஆலய மறையாசிரியர்களை இணைத்து முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு 16ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. யாழ். மறைக்கோட்ட மறையாசிரிய இணைப்பாளர் அருட்தந்தை: அன்ரனிபாலா அவர்களின் ஒழுங்கு படுத்தலில் குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை: யாவிஸ் அவர்களின் உதவியுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடலும் பாட ஆயத்தம் தொடர்பான கருத்துரையும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் 25 வரையான மறையாசிரியர்கள் பங்கு பற்றி பயனடைந்தனர்.

## புனிதர்களைப் பற்றிப் பார்போம் - அவர்களிலும் வேறுபாடுகள் உண்டு!

1. **மறைச்சாட்சிகள் – Martyrs**
2. **துறவிகள் – Monks – வனத்துச் சின்னப்பர், வனத்து அந்தோணியார்.**
3. **செபவாழ்வு வாழ்ந்தவர்கள் – Contemplatives புனித குழந்தை தெரசாள், புனித பாஸ்டினா, புனித அல்போன்சா**
4. **எழுத்தாளர்கள் – Commentators – புனித தாமஸ் அக்குவினாஸ், புனித கிறிஸ்தோம், புனித இஞ்ஞாசியார்.**
5. **இறைவாக்கினர் - Prophets – திருமுழுக்கு யோவான், புனித அருளானந்தர், புனித தாமஸ் மூர்**
6. **பாடகர்கள் Choir – புனித செசீலியம்மாள், புனித கிரகோரி**
7. **நோயுற்றோரைப் பராமரித்தவர்கள் – Care Takers – புனித தமியான், புனித கொல்கோத்தா தெரசா**
8. **சமாதானம் செய்தோர் - Peace Makers – புனித சீயன்னா**
9. **ஏழைகளுக்கு இரங்குதல் – புனித மார்ட்டின் புனித பியோ**
10. **மறையுறை ஆற்றும் பணி – புனித அசிசியார், புனித அந்தோணியார், புனித சவேரியார்.**

நம் ஒவ்வொருவருக்கும் வானதூதர், புனிதர்கள் ஒன்பது பேர் உண்டு. அவர்கள் நம்மைப் பாதுகாக்கும் AK47 படையினர். வானதூதர்கள், புனிதர்கள் உண்மையில் இருக்கிறார்களா? எனப் பலரைக் கேட்டால் அவர்கள் சந்தேகப்படுவார்கள். பேய்களை நம்புகிறாயா? எனக் கேட்டால் பலவிதமான பேய்கள், அவைகளின் பெயர்கள், விலாசம், எல்லாம் சொல்வார்கள். தீமையையும், நோயையும், இருட்டையும் மனிதன் தேடிப் பிடித்துத் தக்கவைத்துக் கொள்கிறான். ஆனால் நன்மை, உடல் சுகம், ஒளியை ஒதுக்கி ஒடுகிறான். ஆதாம் ஏவாளின் குணம் இவர்களை விட்டபாடில்லை

இதற்கு விடிவே கிடையாதா? ஏன் இல்லை நிச்சயம் உண்டு. அதுதான் நாம் இயேசுவின் மீதி வைக்க வேண்டிய விசுவாசம். நம்மீது அவருக்கு கரிசனை உண்டு. நாம் அவரை அணுகுதில்லை. "உலகம் முடியுமட்டும் உங்களோடு இருப்பேன்" என வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார். அவர்வழி செல்வோம். பயத்தினை வேரறுப்போம் – இயேசுவின் பங்காளிகளாவோம்.

✽✽✽

" ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. (மத்: 5:1)

## திரு விவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட தித்திக்கும் திருக்குறள்

**குறள் 28** **அதிகாரம் 3**

**பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் (துறந்தாரின்) பெருமையை உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே (அறவழி நூல்களோ அல்லது மந்திரச் சொற்களோ) அடையாளம் காட்டிவிடும்.**



வார்த்தைகளுக்கு சக்தி இருக்கிறது. அதிலும் நல்ல, தரமான வார்த்தைகளுக்கு ஊட்டமும், ஊக்கமும் தரும் மாபெரும் சக்தி இருக்கிறது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெற்றோர் ஆசிரியர், நண்பர்கள் என பலரும் வெவ்வேறு தருணங்களில் உத்வேகத்துடன் செயல்பட உறுதுணையாக இருப்பார்கள். அவ்வாறு ஊக்கப்படுத்துவதற்காக உபயோகிக்கும் சொற்கள்தான் நாம் வெற்றியை நோக்கிப் பயணிக்க உதவும் தூண்டு கோள்கள்.

**என் பிள்ளையே என் வார்த்தைகளை மனதில் இருத்து! என் கட்டளைகளைச் செல்வமெனப் போற்று (நீ.மொ.7:1) என்கிறார் ஆண்டவர்.** அவர் வார்த்தையால் தான் அனைத்தும் உண்டாகின. நாம் வாழ்வதும், வளர்வதும், அழியாமல் இருப்பதும் அவர் வார்த்தையால்தான். அவர் வார்த்தைகளைப் பற்றி கொண்டு நல்வழியில் நடந்து, பிறரை நல்வழிப்படுத்தியதும் மகான்கள்தாம். பேராற்றல் பெற்ற, மனத் தூய்மை உடைய முனிவர்களின் பெருமையை, அவர்கள் திருவாய் மலர்ந்தருளும் மந்திரச் சொற்களே வெளிப்படுத்தி நிற்கும். சொல் ஆற்றல் உடையது. முனிவர்களின் சொல் மந்திரச் சொல். உடனே வினையை உண்டாக்கி விடக்கூடிய தெய்வ வாக்காகும். அவர்களை மதித்து நடக்க வேண்டும் என்பதே திருவள்ளுவர் கருத்து.

எலிசா என்ற இறைவாக்கினரை ஒரு சமயம் சிறுவர்கள் பார்த்து, வழுக்கைத் தலையா போ! வழுக்கைத் தலையா போ! என்று ஏளனம் செய்தனர். எலிசா அவர்களைத் திரும்பிப் பார்த்து ஆண்டவரின் பெயரால் அவர்களைச் சபித்தார். உடனே காட்டிலிருந்து இரு பெண் கரடிகள் வெளிவந்து சிறுவர்கள் 42 பேரைக் குதறிப் போட்டன. (2 அரசர்கள்2:24)

பேதுருவும், யோவானும் பிற்பகல் 3 மணிக்கு இறைவேண்டல் செய்ய கோவிலுக்குச் செல்லும் போது, பிறவியிலேயே கால் ஊனமுற்ற ஒருவனை (பிச்சைக்காரனை) குணமாக்குகின்றனர். வெள்ளியும், பொன்னும் என்னிடமில்லை, என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும் என்று கூறி அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள். உடனே அவரது காலடிகளும், கணுக்கால்களும் வலுவடைந்து, குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார். (தி.தூ.ப. 3:1–3). இவ்வாறு இறைவாக்கினர்கள் தங்கள் வாழ்வில் எப்படி இருந்திருப் பார்கள் என்பதுதான் மிக அவசியமான கேள்விக்குறி? இதற்கு பேறு பெற்றவர்கள் என்றும் விடை இருக்கும். திருப்பாடல் – 1 ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். நற்பேறு பெற்றவர் (பெரும் அதிர்ஷ்டசாலி) யார்? அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர், பாவிகளின் தீயவழி நில்லாதவர், இகழ்வாரின் குழுவினில் அமராதவர், (தி.பா.1:1) வீணாக, வீணான வார்த்தைகளைப் பேசாது, இரவும் பகலும் ஆண்டவர் சட்டத்தைச் சிந்தித்து, ஆண்டவரில் மகிழ்பவர்களே (தி.ப.1:2) இறைவாக்கினர், சான்றோர், முனிவர் என பொருள் கொள்ளலாம். இவர்களின் வார்த்தைகள் இறை வல்லமையுடன் வெளிப்படும். மந்திரச் சொற்களாக எந்நாளும், எவ்விடத்திலும், எக்காலத்திற்கும் ஏற்றதாக அமையும். நம் வார்த்தைகள் எவ்வாறு இருக்கின்றன? என்பதைச் சிந்திப்போம். டி ❋❋❋

## மரியாவின் அமல உற்பவம் இறைவனின் திருவுளமே! (டிசெ - 8)



கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச வாழ்விலும் அதன் இறையியல் சிந்தனைகளிலும் தனியான இடம் வகிப்பவள் அன்னை மரியாள். ஏனெனில் இவ்வுலகில் மனிதனாய் உடலெடுத்த இறைமகன் கிறிஸ்துவின் அன்புத்தாய் அன்னை.

இறைவட்டத்திலிருந்து மனித வட்டத்துக்குள் நுழைந்த இறைமகன் கிறிஸ்துவை தனது வயிற்றில் கருவாகத் தாங்கி, அவருக்கு மனித உருவம் கொடுத்து, இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவள். இது இறைவன் அன்னைக்கு கொடுத்த சலுகை அல்ல, மாறாக இறைவன் அவளுக்கு அளித்த மாபெரும் அழைப்பு ஆகும். இத்தகைய உன்னத நிலைக்குத் தேர்ந்து கொள்ளப்பட்டதன் காரணமாக இறைவன் அவளை மாசு மறுவற்றவளாக உருவெடுக்கச் செய்தார். இதனால் தான் மரியாளை நாம் அமலஉற்பவி என்று அழைக்கின்றோம். சுவக்கீன் (எதிர்பார்த்திருப்பவர்) அன்னாள் (முடிவற்ற வாழ்வாகிய அருள்) இருவரும் தவமிருந்து பெற்றெடுத்த இணையற்ற செல்வமே, எம் அன்னை மரியாள். மரியாள் என்றால் "ஒப்பற்று உயர்ந்தவள்", "உன்னத மகிமை கொண்டவள்" என பொருள். இவள் பிறப்பால் "மாந்தர் அனைவருக்கும் மீட்பளிக்கும் கடவுளின் அருள் பிரசன்னமாகிறது"(தீத்: 2:11).

எனவே மரியாள் என்னும் நாமம் மானிடர்க்கு அன்பும் அருளும், ஆற்றலும் அளிக்கும், கவலையைப் போக்கும் துன்பத்தை நீக்கும், சோதனையை வெல்லச்செய்யும், நம்பிக்கையூட்டும்: விசுவாசத்தைக் காக்கும். வான் வழி நடத்தி, வல்ல பரனடி சேர்த்து என்றென்றும் வாழவைக்கும் என்பது எமது விசுவாசம். பரிசுத்த கன்னிமரியாள் தன் தாயின் வயிற்றில் கருவானதில் எல்லாக் குழந்தைகளையும் போல் பெற்றோரின் பங்கு உண்டு. ஆனால் அவள் மட்டும் ஜென்ம பாவத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டாள். அருள் நிறைந்தவளாய் (லூக் 1: 28), அழகில் மிதந்தவளாய் உலகில் உருவெடுக்க இறைவன் சித்தம் கொண்டார். அவளே அமல உற்பவி. இந்த அமல உற்பவத்தின் மறையுண்மையை தொடக்க நூலிலே மறைபொருளாக எம்மால் கண்டுணர முடிகிறது. "உனக்கும் பெண்ணுக்கும், உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம். அவர் உன் தலையை நசுக்குவார்." (தொ.நூல் 3: 15). கீழ்ப்படியாமையால் ஆதாம் கடவுளின் கட்டளையை மீறி பாவம் செய்தான். பாவம் விளைந்தது. "ஒரே மனிதனால் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது" (உரோ5:12). மரியாவின் அமல உற்பவம் இறைவனின் திருவுளமே!

இப்பாவத்தில் இருந்த மனுக்குலத்தை மீட்டெடுக்க, சித்தம் கொண்ட இறைவனின் மீட்புப் பாதையில் தன்னை அடையாளங் கண்டு கொண்டதன் விளைாக, அவள் "நாமே அமல உற்பவம்" என சுட்டிக்காட்டுகிறாள். பெர்னபெத் என்கின்ற சிறுமிக்குத் தோன்றிய அன்னையிடம் "அம்மா" தங்கள் பெயர் என்ன என்று கேட்டதற்கு அன்னையின் பதில் "நாமே அமலோற்பவம்". தன்னில் இருப்பதும், இயங்குவதும் ஆண்டவரின் அருங்கொடையன்றி வேறல்ல என்பதனை உணர்ந்த அன்னை "வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல– புரிந்துள்ளார்" (லூக் 1: 46). என தன்னில் இறைத்திட்டத்தை புரிந்துகொண்டாள்.

**தம் உடைமையையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது.**

# லூர்து அன்னை திருத்தலத் திருயாத்திரை ~ 2025



# புனித சூசையப்பர் திருவிழா ~நொய்சி சாம்ப் ~ 2025



அருட்தந்தை: எழில் அவர்களின் குருப்பட்ட நிகழ்வு

## கண்ணீர் அஞ்சலி



அமலமரித்தியாகி
அருட்திரு: அவலின்



அருட்தந்தை: எழில் அவர்களின் குருப்பட்ட நிகழ்வு

# திருக்கெழுத்து புதிர் 90

## 11 குறிப்பேடு 1–18

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | | 5 | | 6 |
| | | | | | | 7 | | 8 | |
| | | 9 | | 10 | | | 11 | | |
| 12 | 13 | | 14 | | 15 | 16 | | 17 | |
| 18 | | | 19 | | | | | | 20 |
| | | 21 | | 22 | | 23 | | 24 | |
| | | 25 | 26 | 27 | 28 | | | | 29 |
| 30 | | | | 31 | | | 32 | 33 | |
| | | 34 | | | 35 | | | 36 | |
| 37 | | | 38 | | | 39 | | | 40 |

### இடமிருந்து வலம்

3. தன்.............வருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான்.
4............யுடைய பொன்னால் ஆனவை.
11. உம் மிகுந்த.......பற்றி அவர்கள் பாதி கூட கூறவில்லை.
16. பன்னிரு...........களின்மேல் அமைக்கப்பட்டிருந்தது.
17..........த்தை அடைந்தாலும் நாட்டை அழிக்க...
18. அவரால் விடுவிக்க............புதிர் ஒன்றும் இல்லை.
19. ஒரு ..........த்தை எழுப்பியுள்ளேன்.
24. எல்லா வினாக்களுக்கும்...........அளித்தார்.
27. ஒதேசின்...........இறைவாக்கினர் அசரியா.
30. ஈராம் சாலமோனுக்கு எழுதி அனுப்பிய.........
37. அவன் மகன்.............ஆட்சி செய்தான்.
38. இவனையே அரசனாக்கவும்........எண்ணியிருந்தான்.

### வலமிருந்து இடம்

2............வின் இதயம்...நிறைவுள்ளதாய் இருந்தது.
3..........மூதாதையாம் தாவீதின் வழியில் நடந்தார்.
4. அரசை உறுதியுடன்...........நாட்டி..
6. முனைகள்...........யில் பேழைக்கு முன் தெரிந்தன.
9. நாடு........... நகர் நகரையும்..
20. இஸ்ராயேல்.............எனக்கு செவி கொடுங்கள்.
21............களில் கருங்கற்களை வெட்டுவதற்கு..
25. மென்...........வலிமையடைந்து வந்தார்.
31. தன் மூதைதையருடன்............கொண்டான்.
32. ஆண்டவர் நல்லவர்,...........பேரன்பு என்றென்றும் உள்ளது.
34. பாசா இ.........வைக் கட்டியெழுப்பலானான்.
35. அங்கே கொள்ளைப்.........கள் மிகுதியாய் இருந்தன.
40.............மறையும் வேளையில் அவன் உயிர்விட்டான்

### மேலிருந்து கீழ்

1. என் தந்தை உங்களைச்...............ளால் அடித்தார்.
2. ...........யுடன் உறவு கொண்டார்.
3. உம்... ....பளுவான நுகத்தை எங்கள் மேல் சுமத்தினார்.
4. நீர் காட்டிய பேரன்பை.............கூரும்.
5. கோட்டைகளை......ப்படுத்தி அவற்றுக்கு தளபதிகளை..
6. வார்ப்புக் கடலின்..........நான்கு விரல்கடை.
7. ..........நாட்டின் ஆளுனர்களும் சாலமோனுக்கு..
9...........கட்டப் போகிற கோவிலும் பெரியதாயிருக்கும்
10. ஆண்டவரின் பார்வையில்..........தும் நேரியதும்..
15........மக்கள் இஸ்ராயேலை ஆள தாவீதையும்..
18. ஒர்........காளையோடும்...
22. அவர் அவர்களை.........கையில் ஒப்படைத்தார்.
23. உனக்குப்.....வரும் அரசர்களோ பெறாத அளவுக்கு...
25. பழியை அவர் தலை...........சுமத்துவீராக.
29. நீர்.......தந்தை சுமத்தின கடினமான...எளிதாக்கும்.
30. நான்.........பெய்யாதவாறு வானத்தை.....
32. போருக்கு........வகுத்து நின்றான்.
35. பசும் ..........தகட்டால் வேய்ந்தார்.
36. கணக்கற்ற உம் மக்களுக்கு யாரால்.....வழுங்கமுடியும்.

### கீழிருந்து மேல்

7. உமது.......விடமாகிய விண்ணகத்திலிருந்து..
8. ஆண்டவரின் பெயருக்கு.....கோவிலைக் கட்டியுள்ளேன்
9. ..........நீரும் உடன்படிக்கை செய்து கொள்வோம்.
10. உமது கையினின்று........விப் போயிற்று.
12. பெரும்.........யை ஆசா கொண்டிருந்தான்.
14. அரசன் கையில் கடவுள்..........ஒப்படைப்பார்.
20. அவர்கள்........குளிருமாறு இன் சொல் பேசினால்..
22.......கின் எல்லா மன்னர்களும் அவரை நாடி வந்தனர்.
26.......க் கலன்களையும் கொண்டு வந்தார்கள்.
28. எல்லா விதக்...........களையும் கொண்டு வந்து.....
29. உம் அரச.......களையும் அணிந்து வாரும்.
32...........அன்னை' நிலையிலிருந்து நீக்கி விட்டான்.
37. மீக்காயாவை உடனே..........த்து வா.
39. என் கடும் சினம் சீசாக்கின்........யாக..விழாது.
40. திருக்காட்சியாளர் மேல்..........சினமுற்றான்.

## எப்போதிலிருந்து கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகிறது?

கிறிஸ்து பிறப்பு விழா கி.பி 87லிருந்து கொண்டாடப்படுவதாக சொல்லப்படுகிறது. கி.பி 137இல் உரோமை ஆயர் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடக் கட்டளை பிறப்பித்ததாக திருச்சபை வரலாற்றில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. ஆனால் பிறந்த சரியான திகதி குறிப்பிடப்படவில்லை. பிறகு கி.பி 150இல் திருத்தந்தை முதலாம் ஜுலியஸ் என்பவர் கிறிஸ்து பிறப்புக்காலம் வசந்த காலமாய் இருக்கும் என்று கருதி அது அந்நிய தெய்வ வழிபாட்டுக் கொண்டாட்டத்திற்குப் போட்டியாக அமையும் என்று கருதி மார்கழி 25ம் திகதி கிறிஸ்மசைக் கொண்டாட ஆணை பிறப்பித்தார். புனித அலெக்சாண்டியா கிளமென்ட் (150–215) அவர்களின் குறிப்பிலிருந்து கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அனுசரிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. கி.பி 336இல் கொண்டாடப்பட்டதாக ரோமைப் பேரரசின் வரலாற்றுக் குறிப்பில் காணக்கிடக்கிறது.

**உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தை திறந்தருளும்.**

## விவிலிய அறிவுப்போட்டி - 90



### உப ஆகமம் 1–10

1. மோயீசன் செகோனையும் ஒகேயையும் எங்கே வைத்து முறியடித்தார்?
2. யார் மீது ஆண்டவர் கோபம் கொண்டு அவனை அழிக்க மனம் கொண்டிருந்தார். நானோ அவருக்காக பரிந்து பேசி அவரையும் காத்தேன் என்று மோயிசன் யாரைக் குறிப்பிடுகின்றார்?
3. “ நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே அவர் உன் முழு இதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக” இதை உற்றுக் கேள் என்று யாருக்கு கூறப்பட்டது?
4. ஆண்டவர் ஒறையரை அழித்து அவர்கள் நாட்டை யாருக்குக் கொடுத்தார்?
5. யாரைக் கும்பிடுகிறவர்களை ஆண்டவர் உங்கள் நடுவில் இராதபடிக்கு அழித்துவிட்டார் என்று கூறப்படுகிறது?
6. ஆண்டவர் தனது திருமுன் நின்று அலுவலைச் செய்வதற்கும் அவருடைய பெயரால் ஆசீர் அளிப்பதற்கும் எந்தக் கோத்திரத்தைத் தேர்ந்தெடுத்தார்?
7. ஏர்மோன் மலையை சீதோனியர் மற்றும் அமோறையர் எவ்வாறு அழைக்கின்றனர்?
8. ஆறுநாள் உழைத்த பின்பு 7ம் நாள் ஒய்வு நாளை எவ்வாறு அழைக்கின்றனர்?
9. ஆண்டவர் எந்த இனத்தை அழித்துவிட்டு மக்கள் நிறைந்ததும் வலிமையுள்ளதுமான இன்னொரு இனத்திற்கு உன்னை தலைவனாக்குவேன் என்று கூறியிருந்தார்?
10. “ அவருடைய வார்த்தைகளை உங்களுக்கு அறிவிக்கும்படி அக்காலத்தில் நானே ஆண்டவருக்கும் உங்களுக்கும் இடையே கொண்டு கூறுபவனாகவும் நடுவனாகவும் இருந்தேன்” யாரால் யாருக்கு கூறப்பட்டது?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 89

### எண்ணாகமம் 25-36

1. லேவியருக்கு (எண் 35:2)
2. பொன்னணிகளை (எண். 31:50)
3. காலேபையும் யோசுவாவையும் (எண் 26:65)
4. ஒரு கோத்திரத்தை விட்டு மற்றொரு கோத்திரத்திற்கு போய்விடும் (எண் 36:7)
5. மதியானியரிடம் (31:2)
6. எலெயசாருக் (எண் 27:19)
7. மோயிசனால் ரூபன் கோத்திரத்தாருக்கும் காத் கோத்திரத்தாருக்கும் (எண் 32:6)
8. புனித தட்டு முட்டுக்களையும் எக்காளங்களையும் (எண் 31:6)
9. இராமேசை விட்டு (எண் 34:15)
10. இரண்டரைக் கோத்திரத்தார் (எண் 34:15)

## விவிலிய பொது அறிவுப்போட்டி 89

### பரிசு பெறுபவர்கள்

### எண்ணாகமம் 25~36

### பரிசு பெறுபவர்கள்

1ம் பரிசு: திருமதி _றீற்றா செல்வரட்ணம்.

2ம் பரிசு: திருமதி _அன்ரன்_றஞ்சிதம்.

### ஏனையவர்கள்

திருமதி _யேசுதாசன் மேரி யொய்சி.

திருமதி _கெலன்யோசவ்

திருமதி _ மேசிபில்டா

திருமதி _ ஜேம்ஸ் மேரி றீற்றா.

செல்வி_யோசவ் சியாமளா.

திருமதி _அமலினி சீமோன்.

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்

பணியக இயக்குனர்

## புதிர் தோட்டம் 95

1. பச்சைக்கீரை சமைக்க உதவாது. வழுக்க உதவும். அது என்ன?
2. ராஜா உண்டு, ராணி உண்டு, மந்திரியும் உண்டு ஆனால் நாடு இல்லை. அது என்ன?
3. மேலே மேலே செல்லும், ஆனால் கீழே வராது. அது என்ன?
4. அடர்ந்த காட்டில் ஒற்றையடிப் பாதை அது என்ன?
5. அனலில் பிறப்பான். ஆகாயத்தில் பறப்பான். அவன் யார்?
6. வாலிலே எண்ணை தலையிலே கொள்ளி அது என்ன?
7முதுகைத் தொட்டால் மூச்சு விடுவான். பல்லைத் தொட்டால் பாட்டுப் பாடுவான். அவன் யார்?
8. மென்மையான உடம்புக்காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன், அவன் யார்?
9. காது பெரியது, ஆனால் கேளாது, வாய் பெரியது ஆனால் பேசாது, வயிறு பெரியது ஆனால் உண்ணாது அது என்ன?
10. வகை வகையாய் தெரியும் வண்ணப்படம். கண் மூடிக் காணும் காட்சிப்படம். அது என்ன?

## புதிர் தோட்ட விடைகள் 94

| | | |
|---|---|---|
| 1. பென்சில் | 5. மண்புழு | 9. அருவி |
| 2. வேம்பு | 6. மருதாணி | 10. எறும்பு |
| 3. வெங்காயம் | 7. ஈசல் | |
| 4. வியர்வை | 8. உழுந்து | |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 89

## 1 குறிப்பேடு 16:29

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

1ம் பரிசு: திருமதி: யோசப் அன்னவதி.

2ம் பரிசு: திருமதி: அன்ரன் றஞ்சிதம்.

3ம் பரிசு: திருமதி: யேசுதாசன் மேரி யோய்சி.

### ஏனையவர்கள்

திருமதி: றீற்றா செல்வரட்ணம்.

திருமதி: யேசுதாசன் மேரி யோய்சி.

திருமதி: அமலினி சீமோன்.

செல்வி: யோசவ் சியாமளா.

திருமதி: ஜேம்ஸ் மேரி றீற்றா.

### சிரி.....சிரி.....சிரி

டாக்டர் தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடச் சொன்னீங்க. ஆனால் எங்கள் கோழி தினமும் வெள்ளை முட்டைதான் போடுது என்ன செய்ய..

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 96

1. யார் உன்னை உருவாக்கினார்?
2. கடவுள் எங்கே இருக்கிறார்?
3. கடவுள் ஏன் உன்னையும் எல்லாவற்றையும் உருவாக்கினார்?
4. நீ எப்படி கடவுளை மகிமைப்படுத்துவாய்?
5. ஒன்றிற்கும் மேற்பட்ட கடவுள்கள் இருக்கிறார்களா?
6. இந்த ஒரே கடவுள் எத்தனை ஆள்தன்மைகளில் இருக்கிறார்?
7. யார் அவர்கள்?
8. யார் கடவுள்?
9. வேதத்தை யார் எழுதியது?
10. நமது முதல் பெற்றோர் யார்?

## சரியான பதில்கள்

### இடமிருந்து வலம்

1. பணிந்து 29:20
7. சுமக்க 23:26
11. சிற்ற 27:32
12. இசை 25:6
13. கையில் ( யா' யி' என மருவியுள்ளது) 29:12
15. மாட்சி 29:13
18. இவர் 24:30
22. நான் 16:22
25. வான் 28:6
26. வேண்டும் 19:12
28. நல்ல 28:8
29. நல்லுறவு 16:6
30. பாடல் 25:7
31. அவனது 28:7
33. மூலம் 21:26

### மேலிருந்து கீழ்

1. பதிவு 23:27
2. துக்க 28:6
3. மகனாய் 22:10
4. உம் 17:17
5. வரி 18:2
6. ஆற்றல் 27:6
8. மன 28:20
14. யாவரும் 25:8
19. ஏன் 21. 3
21. சொல்ல 19:2
22. நாள் 16:23
25. வாழ்வும் 22:9

### வலமிருந்து இடம்

3. மது 19:2
4. உமது 19:3
6. ஆறாவது 24:9
9. சரி 24. 4
10. பல 23:11
12. இனி 23:26
20. ஆணை 21:6
23. அவன் 18:10
26. வாக்கு 17:3
34. இயலும் 22:19

### கீழிருந்து மேல்

10. பழுது 26:27
11. சிரி 19:18
12. இன 20:4
15. பொழிவு 29:22
17. செல்ல 21:30
19. ஏமானின் 25:5
20. ஆசி 16:2
22. நாடு 16:16
24. குலம் 16:32
25. வாழ்த்து 22:2
27. மீக்கா 24:24
28. நன்றி 25. 3
31. அதை 20:1
32. வருவேன் 19:12
34. இல்ல 24:19

## உறவுகள் 95க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1. ஆதியிலே (ஆதி 1:1)
2. ஆழத்தின்மேல் (ஆதி 1:2)
3. வெளிச்சம் (ஆதி 1:5)
4. வானம் (ஆதி 1:8)
5. பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்க (ஆதி 1:14)
6. ஆசீவதித்தார் (ஆதி 1:22)
7. பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி ஆண்டு கொள்ளுங்கள் (ஆதி 1:28)
8. ஏழாம் நாளில் (ஆதி 2:2)
9. மூடுபனி (ஆதி 2:6)
10. பொன் (ஆதி 2:11)

# பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**2வது பிரிவு: 06-09-2025 {9 :30- 17:00}**
**07-09-2025 {9 :30- 17:00}**

**திருமண அருட்சாதன வகுப்பு,**
**பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்**

**இரு அமர்விலும் முக்கியம் கலந்து கொள்ளவும்**



**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**வளர்ந்தோருக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**ஒக்டோ:** புதன் 22ந் திகதி -சனி 25ந் திகதி 17:30-18:30
**நவெ:** புதன் 21ந் திகதி -சனி 24ந் திகதி 17:30-18:30
**டிசெ:** புதன் 25ந் திகதி - சனி 28ந் திகதி 17:30-18:30

baptêmes

**சிறுவர்களுக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**ஒக்டோ:** புதன் 22ந் திகதி -சனி 25ந் திகதி 18:00-19:30
**நவெ:** புதன் 26ந் திகதி -சனி 29ந் திகதி 18:00-19:30
**டிசெ:** புதன் 10ந் திகதி - சனி 13ந் திகதி 18:00-19:30

**இவ் வகுப்புக்கு பெற்றோர், ஞானப் பெற்றோரின் வருகை முக்கியம்**

**நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன (சா. ஞா 3:1)**




விண்ணகத்தின் பேரின்பமே இறைவா! இறந்த ஆன்மாக்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். ஆன்மாக்களின் மீது அளப்பரிய அன்பு கொண்ட ஆண்டவரே! இவ்வுலகில் உயிர்வாழும் ஒவ்வொரு வருடைய ஆன்மாவும் உமக்கு மட்டுமே சொந்தமானது. ஏனெனில் "மனித உடலைவிட மனித ஆன்மா மீது தாகம் கொண்டவர் நீரோ!" எனவே இறந்த ஆன்மாக்களின் மீட்புக்காக உம்மிடம் முழங்கால்படியிட்டு வேண்டி நம்பிக்கையோடு நாடி வருகின்றோம். இறந்த ஆன்மாக்களுக்கும். குறிப்பாக உத்தரிக்கின்ற நிலையில் இருக்கின்ற ஆன்மாக்களுக்கும் முடிவில்லா பேரின்ப வாழ்வைத் தந்தருளும். உமது பேரன்பையும், பேரிரக்கத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்வார்களாக. ♥♥♥

## தை - பணியகத் திருப்பலிகள்

**01-01-2026 - கன்னி மரியாள் இறைவனின் தாய் - புதுவருடத் திருப்பலி**

12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

08:45 Eglise Saint André - 77500 - Chelles

**11-01-2026** குழந்தை இயேசு பணித்தள விழா

16:30 Saint Yves - 93330 - La Courneuve

**25-01-2026** புனித செபஸ்தியார் திருவிழா

11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Pa-

## மாசி - பணியகத் திருப்பலிகள்

**01-02-2026**-புனித டொன்பொஸ்கோதிருவிழா

12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

## பங்குனி - பணியகத் திருப்பலிகள்

**12-03-2026 - திருநீற்றுப்புதன்**

17:00 Chapelle NDR. de Belleville –75011 - Paris

# இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!

மாட்டுத்தொழுவத்தில் மாணிக்கம் ஒன்று பிறக்கப்போகிறதே! மனித வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணிக்க தெய்வம் தான் நேரில் வருகிறதே! ஏற்றத் தாழ்வினை உடைத்தெறிய மானிடனாய் பிறக்கப்போகிறதே! நம் கிறிஸ்துமஸ் பண்டிகையில். என் உறவே! என் வாழ்த்துக்கள் என்றென்றும் உன்னுடன் இருக்கும், இந்த சிறப்பு நாளில், இதோ எனது சிறப்பு வாழ்த்துக்கள்! உனக்கு எல்லா நலமும் வளமும் கிடைக்க இறைவனை பிரார்த்திக்கிறேன். **இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!**



# சிரக்கியூசின் கன்னிகையும் வேதசாட்சியுமான புனித லூசியா (டிசெ: 13)

கி.பி. 283ம் வருடம் ஓர் உரோமானியத் தந்தைக்கும் கிரேக்க வம்சாவழியாகிய யூட்டிக்கியா என்ற பெயர் கொண்ட தாயாருக்கும் இத்தாலியில் உள்ள சிரக்கியூஸ் என்னும் நகரில் ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதற்கு பெற்றோர் 'லுசியா'என்று பெயரிட்டனர். லூசியா என்றால் இலத்தீன் மொழியில் ஒளி அல்லது தெளிவு என்று பொருள்படும். இதை இலத்தீன் மொழியில் லுக்ஸ் அல்லது லூசிஸ் என்று அழைப்பர். இதிலிருந்து மருவி லூசியா வாகியது. அவள் தந்தையார் அவளின் இளம் வயதிலேயே இறந்ததினால் அவளை வளர்த்தெடுக்கும் பொறுப்பு, தாய் யூட்டிக்கியாவின் மேல் சுமத்தப்பட்டது. லூசியாவின் தாயாருக்கு பல வருடங்களாக இரத்தப்போக்கு நோய் இருந்தது. ஆயினும் இளம் லுசியாவால் தனது தாயாரின் கட்டுப்பாட்டில் கிறிஸ்தவ விழுமியங்களான தேவ பக்தியிலும் கற்பிலும் நன்றாக வளர்க்கப்பட்டாள். அத்துடன் அவள் மற்றுமொரு கிறிஸ்தவ கன்னிகையான 'கற்றானியா" என்னும் பெயர்கொண்ட நகரைச் சார்ந்த பெண் புனிதையான ஆகத்தா என்பவரின் வாழ்க்கை முறையால் கவரப்பட்டார். கற்றானியா என்னும் இடம் சிரக்கியூசியிலிருந்து 50 மைல்கள் தூரத்தில் உள்ளது. புனிதை ஆகத்தாவானவர் 52 வருடங்களுக்கு முன்பு ஆண்டவர் இயேசுவுக்காக வேதசாட்சியாக மரித்தவர். ஆகவே லூசியா தனது தாயார் யூட்டிக்கியாவை அழைத்துக்கொண்டு கற்றானியாவில் உள்ள புனித ஆகத்தாவின் கல்லறைக்கு செல்ல உந்தப்பட்டார். அவ்வண்ணமே இருவரும் புனித ஆகத்தாவின் கல்லறைக்குச் சென்று யூட்டிக்கியாவின் இரத்தப்போக்கு நோய்க்காக ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில் இருவருமே தம்மை அறியாமல் ஆழ்ந்த இம்மாத புனிதர் உறக்கத்தினால் ஆட்கொள்ளப்பட்டனர். அவ்வேளையில் புனித ஆகத்தாவானவர், லூசியாவுக்கு ஓர் காட்சியிலே தோன்றி லூசியாவிடம் 'நான் கற்றானியாவில் மகிமை யடைந்தது போன்று நீயும் வெகு சீக்கிரத்தில் சிரக்கியூசில் மகிமையடைவாய் என உறுதியளித்தார்.

அந்தக் கணமே யூட்டிக்கியாவின் பல வருடங்களாக வருந்திய இரத்தப்போக்கு நோய் பூரண குணமாகியது. அதைத் தொடர்ந்து லூசியாவும் புனித ஆகத்தாவைப் போலவே ஆண்டவர் இயேசுவுக்காக திருமணம் புரியாமல் தனது வாழ்வை கன்னிகையாக துறவறத்தில் ஈடுபடுத்தத் தீர்மானித்தாள். ஆனால் லூசியாவின் தாயாரான யூட்டிக்கியாவோ மகளின் விருப்பத்திற்கு மாறாக ஓர் அஞ்ஞானியான ஒரு மணவாளனைத் தேர்ந்தெடுத்து லூசியாவிற்கு மண ஒப்பந்தம் செய்ய எத்தனித்தாள். ஆனால் லூசியாவோ அதை ஒரேயடியாக வேண்டாம் என்று மறுத்துவிட்டார். அத்துடன் தனக்குறிய பூர்வீகச் சொத்து அனைத்தையும் விற்று தாராள மனதோடு வைத்திருந்த அனைத்து பணத்தையும் ஏழை எளியவர்க்கு கொடுத்து விட்டார். இந்த செயலினால் ஏமாற்றம் அடைந்த அந்த மணவாளன் சிசிலி என்னும் பகுதியை ஆண்டு வந்த பஸ்காசியஸ் என்னும் ஆளுனரிடம் லூசியா ஒரு கிறிஸ்தவள் என்று காட்டிக்கொடுத்தான். உடனே ஆளுனன் பஸ்காசியஸ், லூசிவைக் கைது செய்து கொண்டு வந்து பேரரசன் டயோக்கினேசியனின் உருவச் சிலைக்கு தூபம் காட்டி பணிந்துகொள்ள ஆணையிட்டான். மறுப்புத் தெரிவித்தால் லூசியாவை ஓர் விபச்சார விடுதிக்கு அனுப்பி அவள் பாதுகாத்து வந்த கன்னிமையை மானபங்கப்படுத்தப் போவதாக அறிவித்தான். ஆனால் லூசியா அந்த ஆணையை மறுத்ததினால் அவள் பல காவலர்களை அனுப்பி அவளை விபச்சார விடுதிக்கு கூட்டிச் செல்லுமாறு பணித்தான். அந்த வேளையில் லூசியா. இறைவனிடம் மன்றாடியதால் அவள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அவளது மெலிந்த நலிந்த உடம்பானது எவராலும் அசைக்க முடியாத ஓர் பெரிய மலைபோன்று இறுக்கமடைந்து கொஞ்சம் கூட அசைய வில்லை. ஆகவே காவலர்கள் அவளை பல எருதுகளோடு அவளது உடம்பைப் பிணைத்து நகர்த்த முயன்றனர். அப்புறம் அவளது உடல் மேலும் இறுக்கமாகி அசையவில்லை. அதிர்ச்சியடைந்த அவர்கள் அடுத்ததாக அவளை உயிருடன் நெருப்பினாலே கொளுத்துவதற்காக அவளது உடலின் மீது ஏராளமான விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்து தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆனால் நெருப்பு அவளைப் பாதிக்கவில்லை. ஆகவே அவளை வதைத்தவர்கள் அவளது அழகிய இரண்டு கண்களையும் பிடுங்கி எடுத்தனர். ஆனால் அவையும் அற்புதமாக இறைவனால் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இதுவே பிற்காலத்தில் லூசியா பார்வையற்றோரின் பாதுகாவலியாக ஏற்படுத்தப்பட காரணமாகியது. இறுதியாக கொடுமையான ஒரு குறுவாள் ஒன்றினால் அவளது தொண்டையை உருவிச்செல்லக் குத்தினார்கள். அவ்வேளையிலும் அவர் தன்னை வதைத்தவர்களுக்கு எதிராக இறைவாக்கு உரைத்து இயேசுவுக்குப் பிரமாணிக்கமாகவும் ஓர் கன்னிகையான வேதசாட்சியாக தனது 21வது இளம்வயதில் தமது சொந்த ஊராகிய சிரக்கியூசில் கி. பி. 304ம் வருடம் மரித்தார். இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்து தனது அசைவுராத கிறிஸ்தவ விசுவாசத்தினாலும், அர்ப்பணத்தினாலும் தனது கன்னித்தன்மையைப் பாதுகாத்து வேதசாட்சியாக மரித்த காரணத்தினாலேயே விண்ணுலக கிரீடத்தை சுவீகரித்ததன் மூலம் திருச்சபை அவளை இறைபுனிதர் பட்டமளித்து புனித லூசியா என்று மகிமைப்படுத்தியது. அத்துடன் ஆதித் திருச்சபையானது அன்னை மரியாளோடும், மற்றும் பெண் புனிதைகளோடும், புனித லூசியாவையும் சேர்த்து மகிமைப் படுத்துகிறது. திருச்சபைகளினாலும் மரியாதை அளிக்கப்பட்டு மதிக்கப்பட்டு டிசம்பர் மாதம் 13ம் திகதியிலே திருவிழா கொண்டாடப்படுகிறது. ✻✻✻✻✻✻✻